# விவேகி

VIVEKI 1.9.67 40 சதம்



''என்னடி லதா!... ஏன் நீ டேவிட்டை விட்டு மோகனைத் திடீரென்டு காதலிக்க ஆரம்பித்து விட்டாய்"...

"இல்லையடி மாலா... டேவிட் தந்த 'ரிங்'கைவிட மோகன் தந்த

◎ பாரதி நினைவுக் கவிதை



# நிலவுக்கு விடுதலை

## சாலை இளந்திரையன்

வானப் பரப்பில் வளர்ந்து வளர்ந்து
மறுபடி மறுபடி தேயும் நிலவே,
பார்த்தேன் உன்னைப் பலநாள் பலநாள்; –
மட்டிலா வியப்பொடு பின்னும் பார்த்தேன்...

ஒருநா ளாயினும் ஓடினை யோநீ?
ஒழிக. – ஒருநாள் நடந்ததும் உண்டோ ?
நான்தவழ்ந் திருந்தேன். நீதவழ்ந் திருந்தாய்;
நான்நடை கற்றேன், நீதவழ் கின்றாய்;

நாளாய் நாளாய் நடைபயி லாமே
தடுக்கித் தடுக்கி வீழ்ந்து தவழ்வதோ?
தேயத் தேயப் புரிவோர் யார்கள்?–
சிரிநீ, சினநீ எழுநீ, நிலவே!

உன்னைப் பார்க்க விருப்புறும் போதில்
ஓடோடி இங்கே வந்துநிற் கின்றேன்;
என்னைப் பார்க்கும் ஆவல் எழுந்தால்,
இழுத்தே இழுத்தே தவழ்வையோ, தோழா!

காலம் போயும் கால்கை முடங்கிக்
கலைமா மதியே, நீதவழ் காட்சி
காணக் காணக் கண்கள் கூசும்;
கண்ணீர்க் குள்ளே நெஞ்சம் வீழும்...!

மறந்தே போனேன், மதியே! எங்கள்
மறவர் வானிடை ஏறுகின் றார்கள்:–
உன்னைத் தேய்ப்போர் அவர்யா ரெனினும்
உடைத்தே உன்னைக் காப்பார் மெய்யே...

'ஏனோ மனிதர் வானேறு கின்றார்?'
என்றே திகைத்தேன்; இன்றே உணர்ந்தேன்:
தேனார் மதியே, அவர்க்கும் தவழ்ச்சி
கற்றுத் தந்தவன் நீயே அன்றோ?...

விவேகி

மலர்: 8 இதழ்: 9

கௌரவ ஆசிரியர்:
மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி.

நிர்வாகி :
மாட்டின்

ஆசிரியர்கள் :
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# கலையோ? விலையோ...?

பரிசுகள் எழுத்துக்களை வாழவைப்பதில்லை. எழுத்தாளனையே வாழவைக்க முயல்கின்றன. இதனாற்றான், பரிசுகள் பற்றிப் பேசப் புகும் எவரும் எழுத்தைப் பற்றிக் கவலையுறாமல் எழுத்தாளனைப் பற்றியே அதிகம் மனதை அலட்டிக் கொள்கின்றனர்.

இதனால் பல குறைபாடுகள் பரிசளிப்பு நிலையில் ஏற்பட்டுவிடுகின்றன. இத்தகைய குறைபாடுகள் ஈழத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவிலும் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் இந்தியாவிலோ ஒரு ஆண்டிற்கு ஏராளமான நூல்கள் நாற்புறமும் இருந்து வெளிவருவதால், தரமான நூல்கள் சில சமயம் நடுவர்களின் பார்வைக்கோ டில்லிச் சாஹித்திய மண்டலத்தின்பார்வைக்கோ கிட்டாமற்போகிறது. இதனால் தரமான நூல்கள் பரிசு பெறாமல் போகின்றன. ஆனால்—

ஈழத்திலோ, கணிசமான அளவு நூல்கள்ளே வெளியாவதால், சாஹித்திய மண்டல நடுவர்களுக்கு நூல்களைப் பற்றி மட்டுமல்லாமல், நூலை எழுதிய ஆசிரியனைப் பற்றியும் அதிகமாகத் தெரிந்துவிடுகிறது. இந்த அதிக அறிமுக நிலையால் தரமற்ற நூல்கள் எழுதிய சிலருக்கு வலிந்து பரிசளிக்கப்பட்டும், தரமான நூல்கள் எழுதியவர்களுக்கு, சொந்த மனவேக்காடு காரணமாக வலிந்து பரிசளிப்பு புறக்கணிக்கப்பட்டும் விடுகின்றன. இந்நிலையில்—

இவ்வாண்டு ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலம் தமிழ்க் கலைத் துறைக்கு அளித்த பரிசுகள் மிக மிகக் குறைவு. ஏன்? கவிதைத் துறையொன்றினுக்கே பரிசை அளித்துள்ளது. அதுவும் பாதிப் பரிசாக இருவருக்கு அளித்து தனது மனதைத் திருப்திப்படுத்தியுள்ளது.

ஏனைய துறைகளான, புனைகதை, நாடகம், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி என்பன முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஏன் ?

மேற்குறிப்பிட்ட துறைகளில் தரமான நூல்கள் சென்றாண்டு வெளியாகவில்லை என்பதுடன் அவற்றில் போதியளவு நூல்களும்

வெளியாகவில்லை என்பது சாஹித்திய மண்டலத்தின் தமிழ்ப் பிரிவுத் தலைகளின் வாதம்.

இந்தக் கூற்றினை ஈழத்தின் எந்தவொரு தரமான விமர்சகனும், இலக்கிய வாசகனும் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

சென்ற ஆண்டு மேற்குறிப்பிட்ட துறைகளில் பதினேழுக்கு மேற்பட்ட நூல்கள் வெளியாகியுள்ளன. இந்த எண்ணிக்கை பரிசுக் கணக்கெடுப்பிற்குப் போதாதா ?

இலங்கையின் நூல் வெளியீட்டுத் துறையின் உற்பத்திச் செலவு, சந்தை இறக்குமதி நூல்களின் போட்டி என்பனவற்றைக் கொண்டு நோக்குமிடத்து, இது மாபெரும் சாதனையான எண்ணிக்கை தான். இவ் அறியாமை பரிசீலனைக் குழுவின் இலக்கிய மலட்டுணர்வையே சுட்டிக்காட்டுகிறது.

சென்ற ஆண்டு வெளியான புனைகதை நூல்களில் பல, இதற்கு முன்னைய ஆண்டுகளில் வெளியான நூல்களைவிடத் தரமானவையாகவும், (இதனால் முன்பு பரிசுகள் பெற்றவை தரம் குறைந்தவை என்று பொருளன்று. இது நமது இலக்கிய வளர்ச்சியையே காட்டி நிற்கிறது) ஏன் தென்னிந்திய பிரபல விமர்சகர்களே புகழ்ந்து பராட்டியவையாகவுமுள்ளன.

இப்படிப்பட்ட நிலையில் பரிசுக்கு எந்தவொரு நூலும் தகுதியில்லை என்பது வியப்பை மட்டுமன்றி, தமிழ்ப் பிரிவுத் தலைகளின் 'தெய்வம் வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடான்' என்ற மனப்பக்குவத்தையே காட்டுகின்றது. சரி. இதனால் நிகழப் போவது என்ன ?

அரசாங்கம் தமிழ் நூல்களுக்கு என ஒதுக்கியிருந்த பணத்தில் ஆயிரம் ரூபாயே பயன்படுத்தப் பட்டுள்ளது. மிகுதி நாலாயிரமும் திரும்பவும் அரசாங்கத்திற்கே போய்விடும், இதனைக்கண்ணுற்ற அரசாங்கம் நாளை—

தமிழ் நூல்களுக்கு ஆண்டுக்கு ஆயிரம்ரூபாய் மட்டும் ஒதுக்கினால் போதும் என்று கூறினால் மறுத்துப் பேச நம்மவர்களுக்கு வாய் ஏது ? ஒரு வேளை ஆயிரத்தையே நூறு நூறாக பகிர்ந்தளிப்பார்களோ ? இந்த வினாவுகட்கு காரணம்தான் என்ன ?

பரிசு வழங்கும்போது, நடுவர்கள் இலக்கியம் என்ற நிலையிலிருந்து வழுவி, தங்களின் சமூக நிலைபற்றி சிந்திக்கத் தொடங்குகிறார்கள் அப்போது—

கலை—விலையாகிறது.

---

கலையின் துணை கொண்டே நாம் எமது வாழ்வின் பூரணத்துவத்தை மலர்ச்சியாக்கலாம்; அதுதான் உண்மை வாழ்வின் கீழ் நிற்கும். ஆபத்துக்களினின்றும் பாதுகாக்கும் கேடயமாகும். ஒஸ்கார் வைல்டு

# பல்சுவை

## ஓவிய(ர்) படைப்பு

◉ நமது அட்டைப்பட ஓவியர் 'செள' அவர்கள் சமீபத்தில் ஒரு ஆண் குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார். முதற் குழந்தையாக ஒரு ஆண் மகவைப் பெற்ற அவரின் மகிழ்ச்சியுடன் நாமும் அன்புடன் கலந்து கொள்கிறோம்.

## எழுத்து உயர்ந்தது

◉ யாழ். இலக்கிய வட்டத்தின் முக்கியஉறுப்பினரும் பிரபல எழுத்தாளர்களுமான திருவாளர்கள் க. சி. குலரத்தினம், சு. வேலுப்பிள்ளை (சு. வே) ஆகியோர் அரசாங்க பாட நூற் சபையின் எழுத்தாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ் இருவரும் விவேகி வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். திரு. க. சி. குலரத்தினத்தின் நோத் முதல் கோபல்லவா என்ற சிறந்த ஆராய்ச்சி மிக்க அரசியல் நூலும், மாணவர்க்கான 40 கட்டுரை மஞ்சரி என்ற சுவேயின் நூலும் பாடநூல்களில் பிரசித்தமானவை. சு. வே.— சிறந்த உருவகக்கதை, சிறுகதை, நாடக எழுத்தாளருமாவர்.

## வெளியீடு

◉ யாழ். இலக்கிய வட்ட முக்கிய உறுப்பினரான கவிஞர். வி. கந்தவனத்தின் 'ஏன் இந்தப் பெருமூச்சு?' என்னும் நூல் இம்மாதம் 6-ம் திகதி வெளியிடப்பட்டது.

## பரிசு

◉ யாழ். இலக்கிய வட்ட உறுப்பினர் காரை செ. சுந்தரம்பிள்ளை பதுளை பாரதி வித்தியாலயம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

## இலக்கிய விஜயம்

◉ பாரதியின் பேர்த்தி விஜயபாரதியும், அவர் கணவர் சுந்தரராஜனும் இம்மாதம் ஈழத்திற்கு வருகை தந்துள்ளனர். விஜயபாரதி அவர்கள் தன் பாட்டனின் கவிதைகளையே தனது பி. எச்.டி.படிப்பு ஆராய்ச்சிக்கு 'கரு' வாகக் கொண்டுள்ளார். அவரின் ஆராய்ச்சி நூல் வெளிவருமாயின் - பாரதியாரைப் பற்றிய புதிய செய்திகள் நமக்குக் கிட்டும்.

இதே போன்று பிரபல தென்னிந்திய சிறுகதை, விமர்சக, இலக்கிய ஆராய்ச்சியாளரான கு. அழகிரிசாமி அவர்களும் ஈழத்திற்கு வந்துள்ளார். இவர் ஈழ இலக்கியம் பற்றித் துணிவான, பக்கச்சார் பற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். இவரும் விஜயபாரதி, சுந்தரராஜன் ஆகியோரும் இம்மாதம் 24-ம் திகதி, யாழ். நகரசபை மண்டபத்தில் நடைபெறும் யாழ். இலக்கிய வட்டக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

**மௌனப் படங்கள்**

இம்மாதம் 3-ம் திகதி, யாழ்மாநகரசபை மண்டபத்தில், அமெரிக்க கலாச்சார செய்தித் தாபனத்தார், அமெரிக்கானே, கறுப்புக் கடற் கொள்ளைக்காரன், மூன்று வாள் வீரர்கள் என்னும் மூன்று ஆரம்பகாலபடங்களைக் காட்டி மகிழ்வித்தனர்.

இம்மூன்று படங்களும் நயமான நகைச்சுவைகளுடன் சிறந்த நடிப்பாற்றலுடன் மிளிர்ந்தன. 1926-ம் ஆண்டுக்காலப் படமான இதைப் பார்த்தபோது தற்காலத்திய தமிழ் படங்கள் அந்த நிலையைக் கூட இதுவரை எட்டவில்லையே என்ற எண்ணமே ஏற்பட்டது. ஒரு காலத்தில் ஸ்டண்ட் நடிகரான, ஜூனியா டக்ளஸ் பேர்பாங்கின் வீர நடிப்பையும், மௌனப் படங்கள் எப்படி இருக்குமென்பதையும் சிறப்பாகஅறிய முடிந்தது. இதனை ஒழுங்கு செய்த அமெரிக்க கலாச்சார செய்தித் தாபனத்தாரைப் பாராட்டுகிறோம்.

**இலக்கிய இருவர்**

◉ திரு. ஜெயகாந்தனின் சிறுகதையில் ஒரு நாவலுக்கு வேண்டிய விடயங்கள் மண்டிக்கிடக்கும். திரு. ஜானகிராமனின் நாவலில் ஒரு சிறுகதைக்குரிய கருவே மறைந்து கிடக்கும்.

**கொள்ளையோ கொள்ளை**

◉ தென்னிந்தியச் சஞ்சிகைகளின் மூலம் தற்போது மிகப் பெரிய கொள்ளை நடைபெற்று வருகிறது. இந்திய விலை 35 சதமான பத்திரிகை ஈழத்தில் 50 சதமாக விற்பனை செய்யப்படுகிறது உண்மையில் 20 சதமான பத்திரிகையை 50 சதம் கொடுத்து வாங்கும் முட்டாள்களா நமது வாசகர்கள்.

**கூட்டுறவு**

◉ யாழ்ப்பாணத்தில் 'கூட்டுறவு' என்ற மாதமிரு பத்திரிகை ஒன்று வெளியாகி வருவதை யாருமறிவர். கூட்டுறவு வளர்ச்சிக்காகதாபிக்கப்பட்ட இப் பத்திரிகையில் தற்போது தர்க்க பூர்வமாகவும் ஆழமான சமுதாய, வரலாற்றுப் பின்னணியால் உருவான இலக்கியம், கலை பற்றிய விமர்சனக் கட்டுரைகள் வெளியாகின்றன.

# கயிற்றரவு

திருமதி. ப. ஆனந்தசிவம்

அழகிற்கு அழகு தரும் கிராமமது. அதன் தென் கிழக்கு எல்லையிலே பெரிய ஓர் ஆலமரம். அதன் ஒரு பெரிய வேரில் ஓர் உருக்குலைந்த உருவம். எலும்பைத் தவிர வேறெதுவுமில்லாத அதற்குப் பலர் பல பெயர்கள் கொண்டு கூப்பிடுவார்கள். விசரன், லூசன். இப்படி ஒன்றைக் கண்டு விட்டால் கூப்பிடுவதற்கு நம்மிடம் பெயர்களா இல்லை. ''எடே சிவா உன் அம்மா எங்கேயடா" யென யாரும் கேட்டு விட்டால் மூச்சு விடாது ''அம்மா, அம்மா" வெனச் சொல்லத் தொடங்கி விடுவான். இப்படி ஓயாது சொல்வதில் உள்ள மர்மம்தான் என்ன?

தற்கொலை செய்ய முயற்சிப்பவனுக்குத் தண்டனை உண்டு. தற்கொலை செய்தவனுக்கு யாரால் தண்டனை கொடுக்க முடியும்? காமாட்சிக்குச் சாவில் இருக்கும் இன்பம் போல் வேறெதிலும் இருக்கவில்லை. அவள் இந்த உலகில் பிறந்து நாளுக்கு ஒரு தரம் சாப்பிட வகையற்று அணு அணுவாகச் சாக வேண்டியிருந்தது.

வீடென அவர்களால் மதிக்கப்படும் அந்த மாலுக்கு ஆறிஞ்சிக்கொரு கிடுகு வைத்தடைக்கப்பட்டிருந்தது. வீட்டிற்குள் இரு 'காட்போட்'பெட்டிகள். வெளித் திண்ணையில் வெகு காலம் பாவிக்காத அம்மியும் உடைந்த குழவியும் காணப்பட்டன. மழை நழுவி விழுந்த அத் திண்ணையை அழகுபடுத்தின புற்றெடுக்கும் எறும்புகள். வீட்டின் முழுப் பாரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும் கப்புக் காலில் காமாட்சி சாய்ந்து கொண்டிருந்தாள். காமாட்சியின் குழந்தைகள் சிவா புவனம் என்பவர்களால் றோட்டில் ஒட்டப்படும் விளம்பரப் பத்திரங்கள் அங்குமிங்குமாகப் பரப்பப்பட்டிருந்தன. எந்த யோசனையுமின்றி அவர்கள் ஓடுவதும் வந்து தாயைத் தொடுவதுமாக இருந்தார்கள். சிவாவிற்கு வயது பதினொன்று. வயதிற்கு அதிகமாகவே வளர்ந்து மெலிந்திருந்தான். புவனத்திற்கு வயதெட்டு. தகுந்த உடையில்லாது பாடசாலையை காணுதிருந்தாள். சிவா பாடசாலை போவது கல்வியிலுள்ள அக்கறையிலல்ல. அங்கு கொடுக்கும் பாண் துண்டிற்காக-அதை நம்பியிருக்கும் தாய் சகோதரிக்காகப் போவான். சீமான் வீட்டுப் பிள்ளைகள் அப்பாணைக் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்கள். ஆனால் சிவா ஏழெட்டென தன் அழுக்கடைந்த 'பாக்கற்'றுக்குள் எடுத்து வைக்கும் பொழுது பார்த்துச் சிரிக்காமலும் போகமாட்டார்கள். மாணவர்கள் பெஞ்சிலால் எழுதி விட்டு எறியும் கொப்பிகளை எடுத்து அழிறபரால் அழித்து

விட்டு எழுதுவான். சிவா, புவனம் வயதில் குறைந்தவர்களாக இருந்தும் ''பசிக்குதம்மா" எனச் சொல்லி தாயைக் கலங்க விட மாட்டார்கள். அக்குழந்தைகளுக்கே இந்தப்பசியென்றால் அவ்விருகுழந்தைகளும்கிடந்து விரிந்த காமாட்சியின் குடல் எப்படித் துடிக்கும்? இன்பமும் துன்பமும் இரவும் பகலுமென்பார்கள். அவளுக்கு எல்லாம் ஒன்றுதான்.

சிவா எஸ். எஸ். சி. சித்தியடைந்தான். இனிமேல் தாயை, தாய் பட்ட கஷ்டத்தை. தங்கை பட்ட துன்பத்தை. வீட்டைவிட வெளியிடம் தெரியாதவளை பருவமடைந்த பெண் தோய்த்த உடை உலரும்வரை அண்ணனுக்கு மறைபவளை... பல கனவுகள் கண்டான். "அரசாங்கத்தில் வேலை செய்தால் நிறையப் பணம் கிடைக்குமாண்ணு? என்னைப் பெரியகடை கூட்டிப் போவாயா? ஐஸ்கிறீம் வாங்கித் தருவாயா? நான் உன்னோடு வர முடியாதே! என்னிடம் நல்ல உடையில்லையே! அப்போ இப்படிச் செய்யண்ணு. முதலில் நீ போய் உடுப்புகள் வாங்கி வா. அப்புறம் எல்லோரும் பெரிய கடை பார்க்கப் போவோம்" இப்படி ஓயாது புலம்பும் புவனத்தை நினைத்து சிவா சிந்தும் கண்ணீர்! எஸ். எஸ் சி சித்தியடைந்துவிட்டால்அரசாங்கத்தில் உத்தியோகம்தானென நினைக்கும் அவன் தாய், சகோதரியை அவர்கள் நெஞ்சத்தில் மோதும் ஆசை அலைகளை அவன் கலைக்க விரும்பவில்லை.

''அம்மா! புவனா!! நான் 'கிளறிக்கல்' சோதனை சித்தியடைந்துள்ளேன். இனிமேல் என் ஆசைகள் யாவும் நிறைவேறும். தங்கச்சி முதல் மாதச சம்பளம் எல்லோருக்கும் உடுப்புகள் அடுத்த மாதம் இருவருக்கும் காதோலைகள். அப்புறம சங்கிலிகாப்பு...' அவனுக்கு எப்படிச் சொல்வதெனத் தெரியவில்லை அப்பத்து மாதம் சிவா புவனத்தைசுமந்தது சுமையாகவோ அல்லது அம்மாதங் கழிந்தது காலமாகவோ தெரியவில்லை. சிவா வேலையில் சேர்ந்த மாதம் கழிந்து. காமாட்சிக்கு முப்பதுவருடம்போல் இருந்தது.

விடிந்தால் வெள்ளிக்கிழமை சிவாவிற்குச் சம்பளம் நூற்றெண்பது ரூபாவை எப்படிச் சுமப்பானோ! வியாழக்கிழமை இரவு நித்திரை வந்திமோ? எட்டு மணிக்கு அணைக்கும் இலாம்பு போனால் போகுதென இரவு பன்னிரண்டு மணிவரை எரிந்து கொண்டிருந்தது. 'சிவா'' எனப் பலத்த குரலில் கூப்பிட்டான் காமாட்சியின் அண்ணன் மகன் சோமு. வெக்கத்தை கக்கத்தில் கட்டி வீட்டுக்கு வீடு ஒரு சுண்டு அரிசிக்குக் காமாட்சி பல்லைக்காட்டும் பொழுதுஎட்டிப் பார்க்காத சோமு இன்று ஏன் வருகிறான்?

''மாமி இன்று நல்ல நாள் நான் புவனத்தைக் கூட்டிப் போகவந்தேன்.'' காமாட்சி சிரித்துவிட்டு ''இரவு பகல் தெரியாத நிலையில்தான் வந்துள்ளாய் ஒரு பெண்ணை மணம்முடிக்க விரும்பின் இதுதானா நேரம். நீயா

பெண் கேட்க வாறது. இதில் இருந்து தெரியவில்லையா உன் குறிக்கோள் என்னவென்று: அது மட்டுமல்ல நான் வாய்விட்டுச் சொல்கிறேன் கேள். இவ்வளவு பணமிருந்தும் உன்னை ஒருத்தி விரும்பினுளா! ஏன்? காரணம் உனக்கே தெரியும். என் புவனம் கன்னியாகவே இருக்க நேரிட்டாலும் உனக்குத் தரேன்''

சோமு எந்தக் குடிவெறியிலும் இப்படிக் கோபப்பட்டிருக்கமாட்டான். ''உன்னுல் தரமுடியாதென்றுல் என்னுல் எடுக்க முடியாதென்று நினைத்தாய்? புவனத்தை பிடித்திழுத்துக்கொண்டு "இதில் யாரும் தலையிட்டால் அப்புறம் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது.''

'மச்சான் உன் காலில் விழுந்து கெஞ்சுகின்றேன். என் தங்கையை விட்டு விடு" என்றுன் சிவா.

''தம்பி நாங்கள் பட்ட கஷ்டம் போதுமடா. இனிமேலும் தேடித்தராதே.'' எனக் கெஞ்சினுள் காமாட்சி.

காமாட்சியின் மனக் குமுறலும் சிவாவின் கண்ணீரும் சோமுவின் மனதை இழக்கியதாகத் தெரியவில்லை

ஆறு மாதங்களின் பின் பெரிய கோட்டில் காமாட்சியின் கொலை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ''காமாட்சியை அதாவது உன் தாயை சோமு உதைந்து கொன்றதை நீர் கண்டீரா?" சிவாவிடம் அப்புக்காத்து தன் திறமையால் கேட்ட கேள்வி.

'நான் பட்ட கஷ்டங்கள் போதும் மகனே. இனியாவது என்னை உன் நிழலில் இருத்திவிடு' எனச் சொன்ன அம்மா இறந்து விட்டாள். உன் உயர்வும் உத்தியோகமும் தான் மகனே என் உயிரை பிடித்து வைத்திருக்கிறது என்றவள் மறைந்து விட்டாள். அவன் அம்மாவையும் அவள் கண்ட கனவுகளையும் எரித்து விட்டார்கள். ''அம்மா, அம்மா"வென அவன் ஓயாது கூப்பிடும் பெற்றவளை ஏற்றுவிட்டான் இறைவன். இனிமேல் ஒரு வழக்கும் அதற்கொரு சாட்சியும். சிவாவின் முதல் மாதச் சம்பளத்தை, காமாட்சி ஊரெல்லாம் என்பிள்ளை இருநூறுஎடுக்கின்றுன் எனச் சொல்லி வாயாற இருந்ததை, தாய்க்கும் தங்கைக்கும் புதுப் புடவைகள் வாங்க இருந்ததை, சிவா எப்படியோ புதுச்சேலைகட்டி அன்னை காமாட்சியை சுடுகாடுவரை கொண்டு போனுன் தானே! அப்புக்காத்தின் கேள்வி சிவாவின் சிந்தனையில் ஏறியதாகத் தெரியவில்லை. சோமுவை கொலைகாரனுக்கி விட்டால் அவன் தங்கை விதவையாகிவிடுவாள். புவனத்திற்கு சோமு அடிபோட்டாலும் நேரத்திற்கு நேரம வயிருர சாப்பிடுவாளல்லவா. சிவா எதைஎதை எண்ணினுனே இறுதியில் ''நான்காணவில்லை'' என்றுன். சிறிது நேர அமைதியின்பின் எழுந்த சிவா, புவனத்தின் ''அம்மா என்னைப் பெற்றவளே" என்ற சொற்கள் அங்கிருந்த சிலரைக் கலங்க வைத்தது.

◉

# விளம்பரம்; ஒரு கலை

—எஸ். எம். ஜே.—

நேரம் பொழுதுபோக்குக்காகவோ அன்றேல் பழக்கமாகவோ பத்திரிகை, சஞ்சிகைகளைப்படித்துவருகின்றோம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவற்றிலே விளம்பரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. நம்மையாரும்கட்டாயப்படுத்தாவிட்டாலும் விளம்பரங்களில் இருந்து தப்பிக்கொள்ளவும் வழியில்லை.

**எங்கும் விளம்பரம்**

விளம்பரக்கலை இன்று நவீன முறையில் வளர்ந்து மக்கள் வாழ்வில் ஓர் அம்சமாகி விட்டது. நவீன சாதனங்கள் விளம்பரக் கலைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றன. ரெலிவிஷன், வானொலி, நவமான அச்சுக்கலை, திரைப்படங்கள் என்பன இக்கலைக்குப் புத்துயிரும், புது மெருகும் அளித்துக்கொண்டே வருகின்றன. உலகில் விளம்பரஞ் செய்யப்படாத தொழில்கள் ஒன்றும் இல்லை என்றே கூறலாம். வியாபாரத்துக்கழகு விளம்பரஞ் செய்தல் என்பார்கள். பழைய காலத்தில் விளம்பரஞ் செய்துதான் இருக்கிறார்கள். பிரான்சு தேசத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் உவைன் விற்பனையில் கையாளப்பட்ட விளம்பரம் இதோ; சிறந்த உவைன் விற்பனையாளர் முந்திரிகைச்செடியைத் தவறணைகளுக்கு முன் நட்டிருப்பார்களாம். அதன் விளைவாகவே, ''நல்ல உவைனுக்குச் செடி எதற்கு" என்னும் பழமொழி தோன்றிவிட்டது தமிழிலும், ''மல்லிகைப் பூவிற்கு மணமே விளம்பரம்" என்பர்.

**மூன்று காரணங்கள்**

பொருளாதாரத் தத்துவப்படி இந்த விளம்பரக் கலை வர்த்தகத் துறையில் வளர்ந்து விட்டதற்கும், இன்னும் அது நிலைத்து நிற்பதற்கும் பற்றுக்கோடாக இருக்கும் காரணங்கள் மூன்று. ஒன்று பயம்; இரண்டு மடமை; மூன்று அறியாமை. ஒருவருக்குச் சளிச்சுரமோ, தடிமன் காய்ச்சலோ கண்டுவிட்டால் அவருடைய மனப்பயம் ஏதோ ஒரு மருந்தை வாங்கிவிடவேண்டும் என்று தூண்டும். தலைவலிக்கு விளம்பரத்தில் கண்ட எந்தயும் ஒருவர் வாங்கி, தனது நோயைக் குறைத்துக்கொள்ளத் துடிப்பது இயல்பு இவ்வித உணர்ச்சி விளம்பரத்தினால் தூண்டப்பட்டது எனலாம். இங்கு மனப்பயமும் முக்கியமான கருவியாகி விடுகின்றது. இவ்வாறே விளம்பரஞ் செய்யப்படும் அநேக பொருள்களை வாங்கும்படி செய்யும் சக்தி மனப்பயத்துக்கு உண்டு.

மடமை சாதாரண மக்களிடத்தில்— பாமர மக்களிடத்தில் காணப்படும் இயல்பான குணம் என்று கூறலாம். இதுவும் விளம்பரத்துக்கு உதவுகின்றது. ''பட்டால்'' ''டுப்றின்'' இவ் இரண்டும் வலியைப் போக்கும் மருந்துகள்தான். ஆனல் எதை வாங்க வேண்டும் என்று பகுத்தறியாமல் இரண்டையுமே வாங்கி விடுபவர்களுமுளர்: முன் யோசனையின்றி யார் பேச்சையும் நம்பி, அதையோ, இதையோ வாங்கவுங் கூடும். விளம்பரத்தில் ஏற்படும் தடுமாற்றம் தெளிவின்றி எதையும் வாங்கச் செய்துவிடுகின்றது.

சிலரது அறியாமை விளம்பரத்துக்கு அதிக வாய்ப்பளிக்கின்றது. எல்லோரும் வாங்குகிருர்கள்; நாமும் வாங்குவோம் என்று வாங்கி விடுபவர்கள் பலர்.

**விளம்பரத்திற்கும் விலேயே!**

வர்த்தகர்களும், உற்பத்தித் தாபனங்களும், விளம்பரங்களேப் பிரமாண்டமாய்ச் செய்கிருர்களே; இப்படிச் செலவு செய்தால் கட்டுமானமாகுமா என்று எவரும் கவலேப்படவேண்டியதில்லே. உற்பத்திக்கு எவ்வளவு முடியும் என்று உற்பத்தியாளருக்குத் தெரியும். உற்பத்திக்கும் விளம்பரத்துக்கும் சேர்த்து முதலீடு செய்து பொருள் விற்பனேக்கு வரும் பொழுது அதன் விலேயில் விளம்பரச் செலவும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

**விளம்பரமும் விலே மலிவும்**

நாம் விளம்பரத்தைப் பார்க்கிருேம்; பொருளே வாங்குகிருேம். விளம்பரம் செய்யப்படாத பொருளானல், அது விளம்பரம் செய்யப்பட்ட பொருளே விட விலே அதிகமானதாகவே இருக்கும். விளம்பரம் செய்வதால் ஒரு பொருளின் விற்பனே அதிகமாகிறது. அதனல் தயாரிப்பாளர் மிகக் குறைந்த லாபத்திற்கு அதை விற்ருலும் மொத்த விற்பனே அதிகமாய் இருப்பதால் கணிசமான இலாபங் கிடைக்கின்றது. தயாரிப்பாளரும் திருப்தியடைகிருர்கள். விற்பனேயாகும் பொருள்களின் உற்பத்தி குறைந்தால் தயாரிப்பாளர் விலேயைக் கூட்ட வேண்டி வரும். எனவே அதிக விற்பனேக்கும், பொருளின் குறைந்த விலேக்கும் காரணமாவது சிறந்த விளம்பரங்களே.

> **கணகர் :** (நர்சிடம்) என்ர மகள் புருஷன் வயிற்றுக் குத்தெண்டு வந்தவர் கண்டனியே புள்ளே.
>
> **நர்ஸ் :** (கவனிக்காமல்) வயிற்றுக் குத்தெண்டா பிள்ளேப்பெறு வாட்டில பாரண.
>
> அனலே — ரஞ்சினி ராசன்

**இலவச சேவை**

இலங்கையில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன் நாடு பூராவும் பாடசாலேகளுக்கு, விசேஷமாய்க் கிராமப் பாடசாலேகளுக்கு இலவசமாகத் தேயிலே விநியோகித்தனர். ''எந்த நேரமாயினும் தேநீர் நேரமே'' என்ற சுலோகத்துடன் கிராமங்களிலும், பட்டினங்களிலும் மோட்டார் வண்டிகள் சுற்றித் திரிந்ததையும் பலர் பார்த்திருக்

கலாம். "லிவர் பிறதேர்ஸ்" ஸ்தாபனத்தார் இலவசமாய் பற்பசை, 'ருத்பிறஷ்' என்பன வற்றைப் பங்கீடு செய்தனர். "நெஸ்லே" ஸ்தாபனத்தார் நெஸ்ரோமோல்ட் பானத்தை யும், "கோர்லிக்ஸ் ஸ்தாபனம்" கோர்லிக்ஸ் பானத்தையும், "ஓவல்ரின்" விற்பனையாளர் ஓவல்ரின் பானத்தையும் பிள்ளை களுக்கும் பெரியோருக்கும் இல வசமாய்க் கொடுப்பதையும் அறி வோம். இதுவும் விளம்பரத்தின் ஒரு அம்சம், அல்லது புது உத்தி என்று கூறலாம். மக்களைப் பழக்கப்படுத்தவும், இப்படியான பானங்களை நாடச் செய்யவும் கையாளும் உபாயம் இது. இல வசமாய்ப் பெற்றதை, பின்னர் பணம் கொடுத்து வாங்கச் செய்யலாம் அல்லவா? இதனால் அவர்களுக்கு நஷ்டம் கிடை யாது.

**பெயர் மாற்றம்**

உற்பத்தியாளரும், வியாபா ரத் தாபனங்களும் இன்னுமோர் உத்தியையும் விளம்பரங்களில் கையாளுகிறார்கள். குறிப்பிட்ட ஒரு பாவனைப் பொருளுக்கு கிராக்கி ஏற்படுத்த அப் பொரு ளின் பெயரையே மாற்றி விடு கிறார்கள். அல்லது புதிய அம்சத் தைப் புகுத்திவிடுகிறார்கள். இங்கிலாந்து தேசத்தில் Chickery என்னும் உணவுப் பொருளைத் தயாரித்து விற்பனை செய்து வந்தது ஒரு கம்பனி. அதன் விற்பனையைக் கூட்ட அதே பொருளை வேறு பெயரில் பெட்டிகளில் அடைத்து அனுப் பினார்கள். Richery என்ற புதுப் பெயருடன் வெளி வந்த அதே பொருள் முன்னரிலும் அதிகமாக விலைப்பட்டது.

**சந்தை நெருக்கடி**

தாம் தயாரித்து விநியோகிக் கும் பொருளின் மதிப்பு-கிராக்கி குறைந்துவிடுமென்றால், மார்கட் டில் உள்ள ஸ்ரொக் முழுவதை யும் தங்கள் சொந்த ஆட்களைக் கொண்டே வாங்குவித்து, அவற் றிற்குத் தட்டுப்பாட்டை ஏற் படுத்திவிட்டு, மீண்டும் சில கால இடைவெளிக்குப்பின் அதே பொ ருட்களுக்குப் பிரமாண்டமான விளம்பரஞ் செய்து விநியோகஞ் செய்கிறார்கள். முன்னரைவிட அதிகமாக விற்பனையாகிறது அதே பொருட்கள். இதுவும் ஒரு வியாபார தந்திரந்தான்.

**ஊக்க சக்தி**

விற்பனை என்பது அரிய செயல் என்றுகூறுபவர்கள்உளர். விவேக முடனும், திறமையுடனும் செய்யப்படும் விளம்பரங்கள் மக் கள் மனதை உறுத்துகின்றன; நம்பிக்கை ஊட்டுகின்றன. இதனால் விற்பனை அதிகரிக்கின் றது. வளர்ந்துவரும் பொருளா தாரத்துக்கு உயிர்நாடியாக விளங்குவது விளம்பரமே. விற்ப னையின் கருவியான விளம்பரத் தின் முனை மழுங்குமேயாகில் அதனால் பெரும் நஷ்டமே விளை யும்.

**வியாபாரச் சின்னம்**

விளம்பரம் தரமான பொரு ளின் உற்பத்திக்கு உதவுகின்றது. போட்டி எழுந்தாலும் அதன் தரம் குறைந்துவிடாது; ஏனெ னில் முன்னர் நிலை நாட்டப்

பெற்ற பெயரை உற்பத்தியாளர் இழந்துவிடத் துணியமாட்டார் கள். இன்னமும் பொருளின் தரத்தைப் பகுத்தறியக் கூடிய வர்கள், தரங் குறைந்தவற்றை நாடமாட்டார்கள்; விளம்பரத் தால்தான் தரக் குறைவையும், உயர்தரத்தையும் பகுத்தறியச் செய்யமுடியும்; விளம்பரத்தின் முதல் நோக்கம் விற்பனை; குறிப் பிட்ட ஸ்தாபனத்தின், அல் லது ஸ்தாபகரின் பெயரை நிலை நாட்டுவதோ, ஒரு வியாபாரச் சின்னத்தை ஸ்திரமாக்குவது, அன்றேல், ஒரு தொழில்தாபனத் தில் இருந்து உற்பத்தி செய்யப் படும் பொருளை அறிமுகப்படுத் துவது, பாவனையாளரின் நல் மதிப்பையும் ஆதரவையும் திரட்டுவது என்பன இரண்டாமி டத்தில் உள்ளநோக்கங்களாகும். ஒரு பொருளின் விளம்பரத்தை நன்றாக அறிந்த 100 பேரில் 20 பேராவது அப்பொருளின்பாவனை யாளராகவே இருக்கிறார்கள் என் பது கண்டறியப்பட்டது.

### கலாச்சார வளர்ச்சி

விளம்பரம் பொருளாதார விருத்திக்கு மாத்திரம் உதவுகிற தென்று எண்ணிவிட வேண்டாம். அதுநம்நாட்டின்கலாச்சார உயர் வுக்கும் உதவுகின்றது. நம் நாட் டில் வெளிவந்து கொண்டிருக்கும் சிறப்பான தினசரிகள், வாரப் பத்திரிகைகள், அயல் நாடுகளில் இருந்து வரும் தரமான சஞ்சி கைகள்ஆகியவற்றைஇப்பொழுது மலிவாகப் பெற முடிகிறதென் றால் முக்கிய காரணம் விளம்பரங் களே. தயாரிப்புச் செலவுகளை விளம்பரங்களால் கிடைக்கும் வருமானம் ஓரளவுக்கு ஈடு செய் கின்றது. இந்த வருமானம் இல் லையேல் பத்திரிகைகளின் விலை அதிகரிக்கும்; விற்பனை குறையும். படிக்கும் மக்கள் தொகை குறைந் தால் கலாச்சாரம் அபிவிருத்தி யடைவதுதடைப்படும். கலைகளின் வளர்ச்சி குன்றும். இலக்கிய ஆர் வம் இல்லாது போகும்.

விளம்பரங்கள் படிப்பவர்க ளது கவனத்தை ஈர்க்கவேண்டும்; படங்கள்தான் கவனத்தைக் கவரக்கூடியவை. வெறும் எழுத் துக்களால் இடத்தை நிரப்பினால் இந்த 'ஸ்புட்னிக் யுகத்தில் யாருக்கும் பிடிக்கமாட்டாது; ஆறுதலாகப் படித்துப் பார்க்கப் பொறுமையும்இராது. பொட்டிட் டாற்போல ஒரே பார்வையில் விளம்பரம் மனதில் பதியக் கூடி யதாய்அமைதல்விரும்பத்தக்கது. இரத்தினச்சுருக்கமாய்இருப்பதே இக்கால போக்குக்கு உகந்தது. புதுப்பாணியில் சித்திரம் தீட்டுப வரும், அவருக்கு ஆலோசனை கூறு பவரும், விளம்பரத்தைத் தயாரிக் கும் ஆட் டைரக்டரும் ஒற்றுமை யாகச் செயல் ஆற்றினால் சிறந்த விளம்பரங்களை உருவாக்கலாம்.

### விளம்பரம் எனும் தீ

விளம்பரக் கலையினால் பல் ஆயிரக்கணக்கானோர் தமது ஊதி யத்தைப் பெறுகிறார்கள். விளம் பரங்கள் செய்யப் பல ஏஜன்சிகள் உருவாகியுள்ளன. கைதேர்ந்த விற்பன்னர்கள் ஓவியர்கள் பட் டம் பெற்ற கலை வல்லுநர்கள் உளர்; பலருக்கு வேலை வாய்ப்ப ளித்து, வியாபாரத்தை விருத்தி செய்து, விற்பனவைப் பெருக்கி தரமான உற்பத்திக்கும், நியாய விலைக்கும் வழி வகுத்து கலை கலாச்சாரத்தை வளர்த்து வரு கின்ற முதற்தரமான கலை விளம் பரக்கலை. விளம்பரக்கலை நெருப் பைப்போன்றது; ஒளிகொடுக்கும் சாதனமாய் அதனைப் பயன்படுத் தலாம். வீட்டை எரித்துச் சாம் பலாக்கவும் உபயோகிக்கலாம்.

◉

# பேராசைக் கனல்

காரை செ. சுந்தரம்பிள்ளை

ஆசைக் கடலில் அகப்பட்டுக் கொண்டேன்
ஐயகோ மீள வழியறி - கில்லேன்
காசைக் கடவுளாய் எண்ணுகின் றேனே
காரணம் காசின்றிக் காரிய மேது ?

இல்லாத ஏழையை இந்தப் புவியில்
ஏனென்று கேட்பவர் யாருமே யில்லை
செல்லாச் சரக்காய் அவனிருக் கின்றான்
சீ சீ இதுதானும் யானிட வாழ்க்கை

கல்லாத மூடன் கனவானு கின்றான்
கற்றவன் கைகட்டி வாய்புதைக் கின்றான்
நல்லா யிருக்குது ஞாலத்து நீதி!
நாளை நடப்பதை யார்சிந்திக் கின்றார்

பொல்லாத தீயரும் பூமியின் மீது
புண்ணிய வான்க ளெனப்படு கின்றார்
நல்லாக யோசித்துப் பாரெந்தன் நண்பா!
நானில மீதிலே காசுதான் தெய்வம்

நன்மை புரிந்திடும் எண்ண முள்ளாரும்
நாலு பணத்திற் கதிபதி யானால்
சொன்ன சொல் மாறிச் செயல்புரி கின்றார்
துட்டரை யாமெண்ணிப் பார்த்திட லாமோ

பொன்னும் பொருளும் இருப்பவ ருக்கே
புத்தி யிருக்குதாம்? பூமியின் தீர்ப்பு!
என்ன படித்தாலும் எங்களுக் கென்ன?
இந்த வுலகத்தில் காசுதான் தேவை

ஆகவே காசுதான் தெய்வமென் கின்றேன்
அர்ச்சனை செய்து வழிபடு கின்றேன்
மோகம் தணிந்திடாக் காமுகன் போலே
மூண்டபே ராசைக் கனலில் வீழ்ந்திட்டேன்

வரப்பெற்றோம் மாத இதழ்

## இளம்பிறை

இளம்பிறையின் ஜூலை இதழ் இந்திய ஜனதிபதி ஸாக்கிர் ஹுசைன் மலராக வெளியாகியுள்ளது. அத்துடன் அதனது தலையங்கமும் ஈழமும் பத்திரிகைகளும் என்ற தலைப்பில் தனிப் பிரசுரமாகவும் வெளியாகியுள்ளது.

'ஈழமும் பத்திரிகைகளும்' என்ற தலையங்கம் மிகவும் உயர்ந்த நோக்கில் ஈழ எழுத்தையும், அதன் பாரம்பரியத்தையும் காலா காலமாக அமுக்கி வரும் ஈழ பத்திரிகைகளின் பலவீனமான மன வுணர்வின் குறைகளைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கின்றது. இந் திய, ஈழ எழுத்துக்களின் தரம் - மதிப்பு எடைக்கல்லில் ஆராயப் பட்டுள்ளது. ஈழ இலக்கிய ஆர்வமுள்ளவர்கள் தம்மையே தாம் பார்த்துக்கொள்ள உதவும் கண்ணாடியாக இத்தலையங்கம் அமைந் துள்ளது. பாராட்டுகின்றோம்.

இந்திய ஜனதிபதி, உப ஜனதிபதி-பற்றியோர் விபரங்களும் சம்பவங்களும் நிறையக் கொடுக்கப்பட்டுள்ளன.

மத்து, தமிழ் முஸ்லிம் பாரம் பரியம், சதுரங்கம் - ஆகியன பயன் மிகு பகுதிகள்.

## "விவேகி"

திங்கள் இதழ்

| | |
|---|---|
| வருட சந்தா | 4-00 |
| தனி இதழ் | -40 |

நிர்வாகி,

29, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்

◉ ஓரங்க நாடகம்

# மனக்குகை

மருதூர் வாணன்




## 1

**இடம் : விஸ்வாவின் வீடு**

**பாத்திரங்கள் : விஸ்வா, கலீல், நாச்சி, சாபிபு**

[நேரம் இரவு 7 மணி]

**விஸ்வா :** (அழுகை) இங்...... ங்... அந்தக் குறுட்டுப் பரிசாரி என்ர வாழ்வைக் கெடுத்துப் போட்... டா... னே... ங்... இங்...

**கலீல் :** (அழைத்துக் கொண்டு வருதல்) விஸ்வா ?......... வீட்டில யாருமில்லையா ? கொளறுச் சத்தங் கேக்குது. என்ன நடந்ததோ ?......

**விஸ்வா:** (கர்ச்சித்து வருதல்) ஹூம்; நடக்கக் கூடாதது நடந்து விட்டது உங்களுக்கு இஞ்சே என்ன வேலே ?

**கலீல் :** (சிரித்தல்) ஹா... ஹா... ஏது, ஒருநாளுமில்லாத கோபம்? ரெண்டு மூணுநாள், விஸ்வாவைக் காண வராத கோபமோ? அது சரி. ஏன் விஸ்வா, கொளறிக் கொண்டிருந்தாய்?

**விஸ்வா :** அதைக் கேக்க நீங்களார்? உங்கள் கேலிப் பேச்சையெல்லாம், மீரா லெவ்வ ஹாஜியாரின் மகள் றகுமாவிடம் வெச்சிக்காமல், என் வீட்டுக்கேன் வந்தயள் ?

கலீல் : ஹா......... ஹா......... பெண்களுக்கே உரித்தானதல்லவா' பொறுமையும் கோபமும்? ஊம், சரி. நான் வந்த வழியே போறன்.

விஸ்வா : நில்லுங்கள்? நான் பூக் குத்தித் தந்த கைலேஞ்சி, தலையாணியுறையெல்லாத்தையும், இப்பவே கொண்ணுந்து என்னிடம் தந்து விட்டுப் போங்கள். இம், சீக்கிரம்......

கலீல் : அதை எல்லாம் றகுமாவுக்குப் பரிசாக...... இல்லை; அதை எல்லாம் எனக்குப் பரிசாகல்லவா நீ தந்தாய்?

விஸ்வா : ஹூம்? என்ன திமிர் உங்களுக்கு? நான் பரிசாதந்தேன்?

கலீல் : அப்போ, அன்புக்காகத் தந்தாயோ, இல்லை...... இம் சரி. உன்னோடு சும்மா பேசிக்கி நிக்க நேரமில்லை. நான் போறன்.

விஸ்வா : ஊங்... ங்... நில்லுங்கள். கொஞ்சமாவது என் மேல் இரக்கமில்லாமச் சூனியஞ் செஞ்சி போட்டானே சாயிவுப் பரிசாரி. அவனுக்குப் பாம்பு கொத்த?

கலீல் : ம்...... கொத்தட்டுமே? எனக்கென்ன? இம்...... என்ன சொன்னாய்? என் பரிசாரி மூத்த வாப்பாவுக்கா நீ பாம்பு கொத்தச் சொல்லித் திட்டினாய்? நீயா என் மூத்த வாப்பாவுக்குப் பாம்பு கொத்திச் சாகச் சாபமிட்டாய்?

விஸ்வா : என் வாழ்வைக் கெடுக்க வந்தவனை நான் எப்பிடி திட்டுவேன். நல்லாச் சாபமும் போடுவேன். உனக்கென்ன?

கலீல் : (கோபமாயறைதல்) ஹிம், இவ்வளவு ஆணவமாடி உனக்கு? தாய் தந்தையற்ற என்னை வளர்த்துப் பெரியாளாக்க என் மூத்த வாப்பா எவ்வளவு பாடு பட்டிருப்பார்? அந்தப்பெரிமை அவருக்குரியது. நீ... பெண்ணென்பதால், சும்மா விட்டேன். இல்லாட்டி ங்... உன்னைப்... புடிச்சி... பொல்லாத ஆத்திரம் வருகுது. (விஸ்வாவின் கழுத்தைப் பிடிக்கிறான்.)

விஸ்வா : என் கழுத்தைச் சும்மா ஏன் புடிச்சிக்கிட்டிரிக்கியள். உங்க கையினாலேயே என்னைக் கொன்று சாக வெய்யுங்கள். இல்லாட்டி விடுங்கள் நான் அந்தக் கெணத்தில ஓடிப்போய் விழுந்து சாகப் போறன்... இம்... விடுங்கள்?

கலீல் : (அதிர்ச்சி) ம்... தற்கொலை செய்யவா...? விடமாட்டேன் நீ தற்கொலை செய்து சாகவேண்டாம். விஸ்வா நீ சாக வேண்டாம். அப்படி நீ இனிமேல், நினைத்து அந்தப் பாழுங் கிணற்றில் விழுந்து செத்திடாதே. என்னை மன்னித்துவிடு விஸ்வா; என்னை மன்னித்துவிடு. என் அன்புக் காதலி விஸ்வாவைச் சாக விடுவேனா?

விஸ்வா : இம்... அப்பிடியெண்டால் என் கைமேல் சத்தியஞ் செய்து கொடுங்கள். இம்... கொடுங்கள். ஏன் தயக்கம்?

கலீல் : (சிரித்தல்) ஹா... ஹா... நீ நல்லாச் சினிமாக்காரி மாதிரிப் பேசுகிருயே? எங்கே கற்றுக் கொண்டாய்? ஆகா... என்ன நடிப்பு......

விஸ்வா : (விசும்பல்) இங்...ங்... அப்போ, என்னைச் சினிமாப் படம் நடிக்கிறவள் மாதிரி ஏமாத்துகன் என்ரு நெனக்கயள்? இங்... ங்...

கலீல் : ஊஹூம் சிணுங்காதே? நீ சினிமாக்காறியுமில்லே, நாடகக் காறியுமில்லே. என் ஆருயிர்க் காதலி. போதுமா?

விஸ்வா : (சிரித்தல்) ஹி... ஹி... ஹி...

கலீல் : அடேயப்பா, சிரிக்கவும் தெரியுமே?

விஸ்வா : (ஒரே சிரிப்பு) ஹி... ஹி... ஹி... ஹி...

கலீல் : ஊஹூம். சிரிச்சது போதும். வந்த விசயத்தைச் சொல்ல மறந்தும் போச்சி. ஹாஜியாரின் மகள் என்னைச் சதாவும் ''கலீல் மச்சான், கலீல் மச்சான்'' என்று பைத்தியமாகப் புலம் பிக்கொண்டிருக்காளாமே? எல்லாம் என்ர பரிசாரி மூத்த வாப்பாட சூனிய வேலையாம். றகுமாவை நாகூரான் தண்டயல்ல மகன் அலாவுதீன் காதலிச்சானல்லவா? தெரியுமோ...?

விஸ்வா : (ஆர்வமாக) என்ன? மெய்தான மச்சான்?

கலீல் : ம்...... அலாவுதீன் என்ர 'பக்கேற் பிரண்டாச்சே' றகுமா என்னை நெனச்சிக் கதைப்பதிலிருந்து என்னைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. நேத்துத் தச்செயலா அலாவுதீனைக் கண்டேன். 'டேய் என்னடா என்னைக் கண்டும் காணாத மாதிப்போருய்? எனக்கி எல்லாந் தெரியுன்டா. றகுமாவை நான் கல்யாணம் முடிக்கமாட்டேன்ரா. என் காதலி விஸ்வா, தங்க ரதம் இரிக்கிருள்டா.' என்று சத்தியஞ் செஞ்சி கொடுத்திட்டேன்.

விஸ்வா : ஆ...... அல்லா ஆமீனுக்கட்டும்.

கலீல் : இப்ப நிம்மதிதானே? விஸ்வா, நான் அவசரமாகக் கல் முனைக்குப் போய் வர வேண்டிரிக்கி. நல்லா இருட்டிப்போச்சி. நான் போய் வரட்டுமா மான் விழியே.

விஸ்வா : அல்லாட காவலாப் போய் வாங்க மச்சான்?

(கலீல் சென்ற பின், விஸ்வாவின் தாயார் நாச்சி இருமிக் கொண்டு மகளை அழைத்தவாறு வருதல்)

நாச்சி : உஹ்...... ஹ்...... மகள்... விஸ்வா? உஹ்...... நாசமாப் போன இரிமல் என்ர நெஞ்சக் கசக்கிப் புழியிது. விஸ்வா. ஒளுப்பம் அடுப்பிலே சுடுதண்ணி வெச்சிக் கொண்டா மகள். உஹ்...... ஹ்......

(சாயிபுப் பரிசாரி வருதல்)

**சாயிபு :** (கனைத்து அழைத்தல்) ஹாக்... க்கும்...... புள்ளே உதுமா நாச்சி...... ?

**நாச்சி :** ஓ......... ஆரது......... பரிசாரியாரா ? வாங்க. இப்பான் மகரிக்கே தேடி ஒங்கட ஊட்டே போய் வந்தன். ஒருதரயுங் காணல்லே.

**சாயிபு :** ஓம் புள்ளே. ஒங்க மூத்த மகள்ர ஊட்ட வந்தாப்போல அதுகள் சொல்லிச்சி. நீங்க என்ன புள்ளே ஒரே இருமிக் கிட்டிரிக்கியள். காசம் புடிச்சாக்களப் போலே.

**நாச்சி :** நாலஞ்சி நாள்க்கூடி ஒரே காச்சலும் இரிமலும். கடயில உள்ள குளிசயளே வாங்கி வாங்கி விழுங்கியும் சொகமா கல்லேப் பரிசாரியார்.

**சாயிபு :** அடி பாவிப் பொடிச்சி. கடைக் குளிசயளெல்லாம் செரியான நெருப்பெலவா ? இப்பிடித்தான் நம்மட சனங்கள். ஒண்டு பாரதூரமாக வந்தாத்தான், என்னப்போலே பரிசாரியளேத் தேடி வாறவிய ?

**நாச்சி :** ஒளுப்பம் என்ர கையப் புடிச்சிப் பாத்து மருந்தக்கிருந்தேத் தாங்க. உஹ்...... ஹ்...... நெஞ்சிக்கேல்லாங் குத்துது.

**சாயிபு :** நெஞ்சிக்கே மட்டுமா குத்தும். வேறெங்கேயெல்லாம் குத்தப் போகுது. இஞ்சே கொண்டா நாடிபாப்பம்.

**நாச்சி :** மகள், விஸ்வா பரிசாரியாருக்கு ஒளுப்பம் கடுங்கோப்பி வெச்சிக்கி வா மகனே? இம்— கையைப் பிடிச்சிப் பாருங்க.

**சாயிபு :** (நாடிபார்த்து) நாச்சி, நீ நல்லகாலமா எனக்கிட்டப் பரிசாரஞ் செய்ய வந்திற்ருய்? அதுகும், இந்த நாளலே. இல்லாட்டி, ஒன்னே வஸ்சூரிச் சுரம் வந்திரிக்கி. நல்ல காலம் ஒன்னேப் பிரட்டிச் சாக வெச்சிரல்லே.

**நாச்சி :** வஸ்சூரிக் காச்சலாம் ஊரெல்லாம், எண்டு எங்கட மருமகன் கலீல்ப் பொடியன் நேத்து என்ர ஊட்ட வந்தது சொல்லிச்சி.

**சாயிபு :** (அதிர்ச்சியுடன்) எ...ன்ன? என்ர பேரன், கலீலா சொன்னுன்? அவனிஞ்சே ஏன் வந்தான், பாவி?

**நாச்சி :** (சிறு சிரிப்பு) இஹி...ஈ... ஏன் ஒங்க பேரன் என்ர ஊட்டே வரப்படாதோ? நாங்கென்ன ஊராரோ? எங்க வாத்தியார்க் காக்காட மகன்தானே. நல்லா வரல்லாம்.

**சாயிபு :** காக்காட மகனும், காவாலிர மகனும், நீயும் ஒண்ட மகளுமாகச் சேந்து என்ர பேரனே வசிய வெச்சிற்றயள். எத்தினே நாள்க்கூடி இந்த வியாபாரம் நடத்துகயள்?

**நாச்சி :** (அதிர்ச்சி) என்ன ? நாங்களா ஒங்கட பேரனே வசிய வெச்சம் ? ஒங்கட பேரனுக்கு நானும் எம்மகளுமா யாபாரஞ் செய்யிறம்? ஒங்கருக்குப் பாம்பு கொத்த. நீங்களா இப்படி பழி செல்லுறயள் ?

**சாயிபு :** (கர்ச்சித்தல்) ஹாங்........... என்ன துணிச்சல். ஹூம். இந்தத் தாசியள்ள ஊட்ட வாறதுக்குத்தான் அந்தப், பாவிப்பயல் இந்தப்பக்கம் வாறத்தேஅடிக்கடி கானுகன்போலி ரிக்கி. காதல் கீதமென்டு பேசித் திரியிருனே, இந்தக் காவா லிப் பறச்சியளத்தானு? ஹூம்? காதாலா காதல்? இந்தப் பிச்சக் காரியளேயளா அவன் காதலிக்க வேணும்? நான் சாகுறத்துக்கிடையில இவர்களின் கள்ளக்காதலே ஒரு கலக் குக் கலக்கிற்றுத்தான், மறுவேலே. மருந்து கட்டப் போறன் பாருங்கடி. வாறன்.

[சாயிபு விரைகிருர்]

**நாச்சி :** (பயந்த சிணுங்கல்) விஸ்வ ... இங்... எங்கேரி பெய்த்தாய்?

**விஸ்வா :** அந்தக் குறுட்டுப் பரிசாரி கதச்சிக்கிப் போறத்தக் கேட்டுத் தாங்கம்மா நிக்கன் ?

**நாச்சி :** எனக்கிப் பயமா இரிக்கிரி மகளே...ய் ? அந்தக் குறுட்டுப் பரிசாரி நம்மளச் சூனியஞ் செஞ்சி சாக வெச்சிப் போட்டுறு வான்டி. நல்லா வாய்பாறிக்கிப் போருன்டி அவன். நான் சென்னத்தேக் கேட்டாயடி. சாயிவுப் பரிசாரிட பேரனேட பேச்சி வெய்யாதரி என்டேனேடி. அவனுகள், இந்த மருத மனேயத் தின்டு கை கழுகினவனுகள் எலவடி மகளே ? (அழுகிருள்) திரை

## 2

**இடம் :** கலீலின் வீடு

**பாத்திரங்கள்:** சாயிபு பரிசாரி, கிழவி, கலீல், அலாவுதீன்

**சாயிபு :** (கர்ச்சனே) ஹூம், இவள் நாச்சிக்கும், அவள்ர மகள் விஸ் வாக்கும் என்ன தைரியன்டா ? என்ர பேரன் கலீலே எப் பிர்ரு, இவளுகளாலே வசியம் பண்ண முடிஞ்சிச்சி? இண்டல ரிந்து, அந்தத் தாசியளேல்லாம், ஒரு கை சூனியஞ் செஞ்சி; துடிக்கத் துடிக்கச் சாக வெச்சிப் போட்டுத்தான் மறுகா எந்த வேலயென்டாலும் பாப்பன்.

(இந் நேரம் நாச்சியின் தாய்க்கிழவி வருதல்)

**கிழவி :** (அவசரப்பட்டழைத்தல்) பரிசாரியார், என்ர மகள்ர புள் ளக்கிக் கேடு பாடான வருத்தம். நீங்க மகரிக்கே வந்து கை புடிச்சிப் பாத்து மருந்து குடுத்தயளாம். அந்த மருந்தக் குடிச்சதும் மூச்சுங் கையுமா ஈழ இழுத்துக் கொண்டிரிக்கிது.

**சாயிபு :** (கர்ச்சித்தல்) ஈழ இழுத்துச் சாகட்டுமே. எனக்கென்ன ? உதுமாநாச்சிர குடும்பத்துக்கு இனி நான் பரிசாரஞ் செய்யத் தயாரில்லே. போ வெளியே ? இம்...... போ......

**கிழவி :** (கெஞ்சுதல்) அல்லா, ஒங்களுக்குத் நன்மையெத் தருவான். ஒளுப்பம் வந்து போங்க பரிசாரியார்.

**சாயிபு :** ஒளுப்பமும் ஏலாது. முழுமினையும் ஏலாது. போவண்டாப் போ.

**கிழவி :** புள்ளத்தாச்சிக் காறி. என்ர பேத்தியக் காப்பாத்துங்க பரிசாரியார். கெதியா வாங்க பரிசாரியார்.

**சாயிபு :** தலைவிரி கோலமாக என்னெதிரே நிக்காதே. இம் போ வெளியே? (தள்ளி விடுதல்) வேச தாரியளுக்கு நான் பரிசாரஞ் செய்ய முடியாது. இம்... போவன்டாப் போடி வெளியே ?

**கிழவி :** (கர்ச்சித்து எழுதல்) த்சீ! நீ ஒரு பரிசாரியேடா, குறுடா? இந்த இருட்டிலே மழதண்ணி யென்டும் பாராமே ஒண்ட காலடிக்கி வந்தத்துக்கு என்னேத் தள்ளியுட்டிட்டாயே பாவி. துபூ ? ஆவத்துதவாத பரிசாரியேடா பாவி.

**சாயிபு :** ஹூம்; இவ்வளவு ஆணவமடி கிழட்டுக் குரங்கே ?
(இதைப் பார்த்துக் கொண்டு நின்ற கலீல் மீண்டும் கிழவிக்கு ஏதும் நேராமல் தடுக்க வருகின்றான்)

**கலீல் :** (பரிவும் எரிவும்) இதென்ன அநியாயம் மூத்த வாப்பா ? விடுங்கள் கிழவியின் கையை (பறித்து விடுதல்) வெகுநேரங் கூடி, உங்கள் அநியாயத்தை நான் பார்த்துக் கொண்டுதான் நிக்கிறன். நடக்கவும் ஏலாத மனிசியை நீங்கள் சீமண்டிப் பூமியிலே தள்ளி விட்டீர்கள்? யாராவது, உங்களை இப்பிடித் தள்ளி விட்டால், என்ன பாடு படுவீர்கள். பாவம் கிழவி. இது அநியாயச் செயல் மூத்த வாப்பா. இது ஆண்டவனுக்கு ஏற்காத செயல்.

**சாயிபு :** ஒன்டா, நல்லாப் பேசு? இந்த மாயக்கிழவி, என்னைப் பேசச் சொல்லி, உன்னை வசயஞ் செஞ்சி போட்டாள். நல்லாப் பேசு நீ? இவளின் பேத்தி விஸ்வா, உன்னை இப்பிடிப் பேசுமளவுக்கு நல்லா ருசிகாட்டிரிக்காள் போலிரிக்கி. பேசு நீ பேசு.

**கலீல் :** மூடுங்கள் வாயை. விஸ்வாவைப் பற்றி இனிமேல் ஏதாவது பேசினுல்.........

**சாயிபு :** என்னடா செஞ்சிருவாய் ?

**கலீல் :** எனக்கு வருகிற கோபத்துக்குச் சின்னு பின்னமாகப்.........

**சாயிபு :** ஆ!......ங்... என்ன, சொன்னுய் ? (படபடத்து அறைதல்) வழிச நாயே. ஹூம்... இவ்வளவு தூரம் வந்திற்றுல் என்ன?
(கலீல் சோகமான அமைதிக்குப் பின்)

**கலீல் :** (விசும்பல்) இங்... ங்... மூத்த வாப்பா. நீங்கள் என்னை அறஞ்சிபோட்டயள். அதுக்காக உங்களைநோகவில்லை. ஆனுல் நீங்க என்னைக் கீழ்த்தரமாகப் பேசி போட்டயள். அதுவும் விஸ்வாவைச் சேர்த்து நீங்க என்னைக் கேவலமான வார்த்தைகளினுல் பேசியது போல, வேறுஎவனுவது 'கன்னுபின்னு' என்று பேசி இருந்தால் நடப்பது வேறு. என் பல்லினுல் இவ்வளவு தூரம் இரத்தம் வடிவது போன்று... இங்... இனி உங்களி

டம் அதிகம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. விஸ்வாவையும் என்னையும் இவ்வளவு தூரம் நீங்கள் பேசிய மட்டிலும், விஸ்வாவை மனைவியாக்கபமல் நான் சாகமாட்டேன். இது சத்தியம் மூத்தவாப்பா. ஆனால், இனிமேல் உங்களுக்கு ஒரு பேரன் கலீல் இருக்கிறான் என்பதை மறந்து விடுங்கள்.

**சாயிபு :** (அழுகை வெடித்து) அப்பிடிச்... செல்லாதேரா பேரன். என்னை... மன்னித்து... விடுடா பேரன் மன்னித்துவிடு இங்...

**கலீல் :** (ஜமாய்த்தல்) ஹும்? யாரிடம் கேக்கிறயள் மன்னிப்பு? இந்தக் கிழட்டு மூத்தம்மாவின் முழங்கையைப் பாருங்கள். ரத்தம் பொசியுது. வைத்தியனைத் தேடி வந்த இவவை நீங்கள் பூமியிலே தள்ளி விங்குக் காயப் படுத்தி விட்டீர்கள். இதுவா, தர்மம்? இதுவா அறிவு? இதுவா நீதி? இந்தக் கிழவி இப்பவே செத்தாலும் சாகலாம். உங்களை அரசு சும்மா விட்டிடுமா?

**சாயிபு :** போதும் பேரனே, போதும் என்னைக் கதையால் கொல்லாதே மகனே. இந்தக் கிழவி வசியஞ் செஞ்சி போட்டாள் அதுதான் நீ இப்பிடிப் பேசுகிறாய் பேரா பேசுகிறாய்?

**கலீல் :** (ஆத்திரம்) ஹீம்... மூத்த வாப்பா, ஆத்திரத்தைத் தூண்டாதீர்கள். வசியமாம் வசியம்? யார் எனக்கு வசியஞ் செய்ததென்று சற்று யோசித்துப் பாருங்கள். மீரா லெப்பை ஹாஜியாரின் மகள் றகுமாவைக் கல்யாணம் முடிக்க வைப்பதற்காக எனக்கு வசிய மருந்து தந்து வைத்தீர்களே? அதை நான் வளர்த்த நாய்க்குப் போட்டு விட்டேன், கடைசியாகச் சொல்கிறேன். நான் விஸ்வாவைக் காதலிக்கிறேன், யார்தடுத்தாலும் விஸ்வாவைக் கல்யாணம் முடிக்கத்தான் போகிறேன்.

இறுதியாகச் சொல்கிறேன். விஸ்வாவின் குடும்பத்தினருக்கு ஏதாவது நேர்ந்தால், அது உங்களால்தான் நேரும். அப்படி உங்களால் நேர்ந்தால் பழிக்குப்பழி வாங்காமல் நான் சாக விட மாட்டேன், மூத்தவாப்பா.

மூத்தம்மா, இம் நடங்கள் வீட்டுக்குப் போவம். இனிமேல், பரிசாரி கிரிசாரியென்று இந்தச் சூனிய வஞ்சனைக்காரரின் பக்கமே வரக்கூடாது. நடங்கள்... மெல்ல...

(கிழவியைக் கலீல் அழைத்துச் செல்கின்றான்)

**சாயிபு :** (பெருமூச்சு) ம், கலீலுக்கு என்னதான் கேடோ, எனக்கெண்டாத் தெரியாது இவனை என்ன செய்யலாம்? (யோசனை செய்துவிட்டு எக்காளச் சிரிப்பு) ஹு... இதுதான் சிறந்த வழி. இதைத் தவிர வேறு வழியே இல்லை. விஸ்வாவை, ''அங்கம்'' விட்டுச் சாகடிக்க வேணும். அப்படிச் செஞ்சாத்தான் கலீல் என்ர சொல்லக் கேட்டு, ஹாஜியாரின் மகளைக் கலி

யாணம் முடிக்கச் சம்மதப்படுவான். ஹா...ஹா சூனியம். ஹா...ஹா... அங்கத்தை ஏவி விட்டு... விஸ்வா... நீ... இன்னும் சில மணிக்குள்ளே... சாகத்தான் போகிறாய்? அதுககிடையில என்ர பேரனை எப்பிடி ஆசை காட்டி மோசஞ் செய்ய முடியுமோ செய் இப்ப விடியிறத்துக்குள் நீ பிணமா கப் போகிறாய் விஸ்வா, பிணமாகப்போகிறாய். கலீல் உன்னைக் கட்டிக் கதறி அழப் போகிறானடி. நான் அந்தப் பயங்கரச் சாவைக் கேள்விப்பட்டுச் சந்தோசப்படத்தான் போகிறேன்.

(இந் நேரம் அலாவுதீன் வருதல்)

**அலா :** (சூழ்ச்சித் திட்டத்தில்) பரிசாரியார். என்ன பெரிய திட்டத்தில் ஈடுபட்டிருககிறாப் போலிரிக்கி?

**சாயிபு :** ஓ... நீயா. உன்னை எங்கோ பாத்த ஞாபகம்?

**அலா :** என்னைத் தெரியலையா பரிசாரியார்? நான்தான் ஒங்கட மருமன் நாகூராந் தண்டயல்ல மகன். பெயர் அலாவுதீன். இப்ப தெரியுமா பரிசாரியார் என்னை யாரெண்டு?

**சாயிபு :** அடடே? எனக்கிப் பேரன் முறை வந்த விசயம்?

**அலா :** எங்க உம்மாவுக்குச் சொகமில்லை. உங்களைக் கூட்டிக்கி வரச், சொன்னாங்க எங்க வாப்பா.

**சாயிபு :** என்ர திட்டத்தை மண்ணாக்கிக் கொண்டு வந்திற்றாயே.

**அலா :** மழை விட்டதோட போயிடுவம் வாங்க பரிசாரியார். இந்தாங்க பத்து ரூபாய். வாங்க வீட்டே சோவம்.

**சாயிபு :** ஓ...... முன் பணமா ? இந்தக் காலத்திலே எங்களப் போல நாட்டு வயித்தியக் காரருக் கெல்லாம் யாரப்பா முன் பணந் தருகிறார்கள். இது என்னமோ...... இம்...... சரி. நீ போ. நான் மருந்துப் பையை எடுத்துக்குப் பின்னாலே வாறன்.

**அலா :** இல்லைப் பரிசாரியார் எங்க வாப்பா உங்களைக் கையோடேயே கூட்டிக்கே வரச் சொன்னார்கள்.

**சாயிபு :** ஊம்...... நானும் ஒரு அவிசரமான காரியத்திலே ஈடுபட்டுக் கொண்டிரிக்கன் அதுக்குள்ளே நீயும் வந்திட்......

**அலா :** இந்தாங்க பரிசாரியார் மேலும் ஐந்து ரூபா. இந் நேரத்தில காரக்கீரப் புடிச்சிக்கி. உம்மாவே கல்முனை அங்கே இங்கே என்டு கொண்டு போக ஏலா என்டுதான் வாப்பா உங்களையே கையோடே கூட்டிக்கி வரச் சொன்னார்கள். ம்...... வாங்க கெதியா... :

**சாயிபு :** (யோசித்துவிட்டு) ம்...... ஆ... புறப்படு புறப்படு. ஓன்ட அலுவலையும் விடியிறத்துக் குள்ளே......

**அலா :** என்ன சொன்னயள்? என்ர அலுவலை...... விடியிறத்.........

**சாயிபு :** இல்...லை... ஒங்க உம்மாட அலுவலத்தான்......

**அலா :** ஹா...... (சிரித்தல்) ஓ...... ஹோ...... மழையும் பெய்யிது. மழை ஒரக்கிறத்துக்குள்ளே......... போவம் இருட்டாவும் கெடக்கு. பாம்பு பல்லி கெடக்கும் பாத்து நடங்க.

**சாயிபு :** பூச்சி பொட்டே கடிச்சா நாம சாகப் போறம்...... ஆ...... ஆ...... என்ர காலிலே...... ஆ... குத்தி... ஆ... பாம்பு......

**அலா :** என்ன பரிசாரியார் பாம்பு கொத்திப் போட்டிச்சா.........? வெளிச்சங் கிளிச்சமாவது இல்லையே... என்ன செய்யலாம்...?

**சாயிபு :** இம்...... ஆ...... என்னை என்ர ஊட்டை கொண்டு போ... ஆ...... வெஷம்...... ஏ... று... து...

(அடுத்த இதழில் நிறையும்)

# விளம்பரங்களும் கொம்பனிகளும்

அனலை - ரஞ்சினி – ராசன்

பப்பாப்பழ விதைகளைக் காய வைத்து எங்களுக்கு விற்பனை செய்யுங்கள்.

மிளகுக் கொம்பனி
புளியந்தீவு

ஆற்றங்கரை சிறு கற்கள் அதிகம் தேவை. உடன் தொடர்பு கொள்க:-

புஸ்பா அரிசி ஆலை
அனலைதீவு

செத்த எலிகள், தவளைகள், பாம்புகள் மற்றும் எலும்புகள் உடனே தேவை.

சூப்பு தயாரிப்பாளர்கள்,
பருத்தீவு

கடற்கரை ஊரிகளும், சிறு கற்களும் இன்றே எந்த அளவிலும் வாங்குவோம்.

உப்புக் கொம்பனி,
கோட்டை

கலர் துணிகளுக்காக எங்கள் கடைக்கு விஜயம் செய்வோர்க்கு கலர் மூக்குக் கண்ணுடிகள் அன்பளிப்போம்.

வெள்ளைச் சீத்தை ரெக்ஸ்ரைல்,
மடத்தடி

வாடிக்கையாளர்களை திருப்திப் படுத்துவதே எங்கள் கொள்கை. எங்கள் கள்ளுக் கொட்டில்களில் எப்பொழுதும் கள்ளுக் கிடைக்கும்.

புளிப்புமா விநியோகஸ்தர்கள்,
ஆலடி

பள்ளி மாணவர்களின் மூளை வளர்ச்சிக்கும், படித்தோரின் களைப்பு நீங்கவும் எங்கள் கசம் சிகரட்டை உபயோகியுங்கள்.

T. B. இன்டஸ்ரீஸ்
புளியடி

உணர்ச்சித் துடிப்புகளுக்கும், உள்ளத்து ஆசைகளுக்கும் எங்கள் ஏடான "எல் உருண்டைவியி" (Love) யைப் படியுங்கள்.

லவ் பப்ளிக்கேசன்ஸ்,
கூடையடி

எழுத்தாளர் கஞ்சனின், "நன்கொடை" எனும் புஸ்தகத்தினை படித்து விட்டீர்களா? அன்றேல் இன்றே எங்களிடம் வாங்குங்கள்.

நயவஞ்சகன் புத்தகசாலை,
புளியந்தீவு

நல்ல தண்ணீர் 1000 கலன் விநியோகிப்பதற்கு ரெண்டர். மருந்துகளின் இருப்பு எடுப்பதற்காக.

பிரைவேட் ஆஸ்பத்திரி,
ஏழுவைதீவு

◉ சென்ற இதழ் தொடர்ச்சி

# கனவுகள் மாறும்

## மு. கனகராசன்

தெருவில் எங்கோ அவசரமாய்ப் போய்க்கொண்டிருந்த மோகனை ஒரு பெரும் அதிர்ச்சியுடன் கண்டபோது அவளின் இதயத்தில் பூரான் ஊர்ந்தது, "'மோகன்... நீங்க... நீங்களா... இங்கே... எங்கே... இப்படி..." உளறலே ஒரு மொழியாய்த் தடுமாறினுள் அவள்.

அவன் சொன்னுன்: "ஆனந்தி! நானும் இங்கேதான் இருக்கிறேன். நீங்களும் இங்கே இருப்பது எனக்குத் தெரியும். சந்திக்க ஒய்வே கிடைக்கவில்லைம்! உங்கள் வீடு கூட தெரியும் அடுத்த புதன்கிழமை வருகிறேன்.''

செவ்வாய்க்கிழமை. ஆனந்தி தன் உடலேயே கருவேல முட்களில் வைத்துக்கொண்டு பேதலித்துத் தடுமாறுகிருள்.

மோகனின் வரவை நினைக்க அவளுக்கு பயமாக இருக்கிறது.

'மோகன் நாளை வருவதாகக் கூறியிருக்கின்றீர்கள். என் கணவர் இங்கே இல்லாத நாளைக் கூட நன்ருகத் தெரிந்து வைத்திருக்கின்றீர்கள். பயங்கரமான முறையில் நடந்துகொள்ள உங்களால் முடியுமா மோகன்?'

'ஐயோ தெய்வமே!'

'என் கணவர் எவ்வளவோ நல்லவர். இந்தக் குடும்ப வாழ்வில் எனக்காக நான்வாழவில்லை. அவருக்காகவும்எங்களின் செல்வ மகனுக்காகவும்தான் வாழ்கின்றேன். என் கணவரின் இதயத்தில் நான் ஒரு முழு வைரம். அப்படியானவரின் நினைவில் தவருன எண்ணங்கள் விளைந்தால்...

'ஐயோ கடுமையாக நடந்து கொள்ள உங்களால் முடியுமா? என் வாழ்வை நிர்மூலமாக்கி விடத்தான் போகின்றீர்களா?

'மோகன்,... ஆனந்திஎன்னை ஏமாற்றிவிட்டாள். அதற்காக நான் அவளின் வாழ்வையே ஏமாற்றிவிடுவேன்' என்றுசொன்னீர்களாமே'

'நான் எழுதிய கடிதங்களையும், நாம் எடுத்துக் கொண்ட படங்களையும் கொண்டே என்னைப் பழி வாங்குவதாக எனக்கே ஒரு தடவை எழுதினீர்களே.'

'என்னைமோசம்செய்யநினைக்காதீர்கள்?'

'நான் தவறு செய்யவில்லை என்று உங்கள் இதயம் ஒரு தடவையாவது நினைத்ததில்லையா மோகன்?

'மகாத்மாவின்சத்தியசோதனையின் சில பகுதிகள் இப்போது தான் எனக்குப் புரிகிறது. மீண்டும் மீண்டும் அதைப் படிக்க எத்தனையோ புதிய புதிய அர்த்தங்கள் பறக்கின்றன. சத்தியம் என்ற வார்த்தைக்கே என்ருே ஒரு நாள் எல்லாரும் பொருள் புரிந்துக் கொள்கின்ருர்கள் தான். புரிந்துக் கொள்ளத்தானே வேண்டும்.'

'இளமை வாழ்வே சத்திய சோதனைதான். வாழ்வே சத்தியம் என்றாகும்போது அதற்கேற்படும் சோதனைகளும் இளமையில் மிகையானதுதான்.

'மோகன் இளமையில் நாம் பழகினோம். வாழ்நாள் முழுவதும் ஒன்றாகவே இருக்கப்போகின்றோம் என்ற நம்பிக்கையில் மிகச் சுதந்திரமாகவே உறவாடினோம். ஆனால்......

'நம் நம்பிக்கையே விபத்தானதே!'


'பருவப் பெண்கள் எப்போதுமே கனவுப் பிரியர்கள். அவர்களுக்குக் கனவுகளே வாழ்க்கை. ஆனால் நான் இன்றும் 'பருவப் பெண்' அல்ல.

'மோகன் ஒருவரையொருவர் நாம் விரும்பினோம்,– நேசித்தோம் என்பதற்கு அப்போது நாம் இளம் வாலிபப் பருவத்தினராய் இருந்தோம் என்பதைத் தவிர வேறெந்தக் காரணமும் இல்லை என்றுதான் படுகிறது. மிகவும் தெளிவோடுதான் இப்படிச் சொல்கிறேன்.

நாம் 'காதல்' என்று சொல்லிக் கொண்ட நம் நேசம் விபத்துக்குள்ளானபோது... ம்! காதலுக்கு அர்த்தம் என்னவென்றே எனக்குப் புரியாமற் போய்விட்டது.

'அப்போது வாழ்வும் விபத்துக்குள்ளாகத்தான் வேண்டுமா என என்னையே நான் கேட்டுக் கொண்டேன். ம...!

'காதல் விபத்தில்' நான் என்னைச் சமாளித்துக் கொண்டேன், ஆனால் மோகன்... நீங்களோ?



1–ம் ஆள் : எனது மகன் பெரிய வனானதும் அரசியல் வாதியாகத்தான் வருவான்.

2–ம் ஆள் : ஏன் நல்லாய்ப் பேசுகிறானா?

1–ம்ஆள் : இல்லை நல்லாய்ப் புளுகுகிறான்.

–எம். எஸ். ரி–

---

இந்த விஷயத்தில் எங்களைவிட ஆண்கள் மிகவும் பலவீனமானவர்கள்தான்.

'மோகன் நான் இன்று ஒரு குடும்பப் பெண் – ஒரு மனைவி. நான் கனவுகளை விரும்ப முடியாது, விரும்பக்கூடாது, விரும்பவில்லை.

'எல்லாம் ஒரு சட்டத்தைப் போல. கேவலம் ஆசைகள் அதை மீறக்கூடாது.

'குடும்பம் என்றது எத்தனை அர்த்த புஷ்டியான வார்த்தை என்பதை நான் நன்றாக புரிந்து கொண்டிருக்கிறேன். குடும்பத்தில் பொறுப்பும், கடமையும் சத்தியத்தைப் போல.

'திரும்பிப் பார்க்கும்போது—இளமையை நினைக்கும்போது எனக்கே வேடிக்கையாயிருக்கிறது.– வாழ்க்கை சமுதாயம் என்ற பிரச்சனைகளில் பெரியவர்கள் கண்டிப்போடு நடந்துகொள்வதன் காரணத்தை எவருமே இப்போது எனக்கு விளக்கத் தேவையில்லை.

'ஹொலிவுட் படம் எதற்கும் நான் போகவே இப்போது விரும்புவதில்லை, ஆமாம்.

'ஆனல் உங்களின் ஆர்வமெல்லாம் என்னை வஞ்சம் தீர்ப்பதில்தானே. உங்களுடைய இந்த நினைவுகளின் காரணம் இளமைத் துடிப்பின் ஆவேசம் தவிர வேறில்லை.'

'மோகன் இன்று நீங்கள் வஞ்சம் தீர்க்கலாம், பரவாயில்லை. ஆனல் வாலிபம் மாறும் போது உங்களின் ஆவேசமெல்லாம் தவருனதாகவே தோன்றும்.'

'பெண்கள் மனைவியாகி, தாயாகும் போது இதையெல்லாம் விரைவாகவே புரிந்து கொள்கின்ருர்கள். நானும் ஒரு தாய்தானே.

'நீங்களோ...... ? உங்களை நினைக்க என் ஈரலே நடுங்குகிறது.

'என்னை நிர்மூலப் படுத்தி விடாதீர்கள். என் குடும்பத்தைச் சிதைத்து விடாதீர்கள்.'

புதன்கிழமை. இதையெல்லாம் நினைந்து நினைந்து அதனலே பயந்து, பயந்து களைத்துப் போனள் ஆனந்தி.

கடந்து போன இளமைக் கால நினைவுகளையெல்லாம் திரட்டிக்கொண்டு வெறிகொண்ட வேங்கையாய் மோகன் வரப் போகிருன் என்பதை நினைக்க நினைக்க ஆனந்தியின் உடலெல்லாம் சில்லிட்டது. அதனல் தெருக் கதவை கூட பூட்டி வைத்தாள்.

பகல் கதவு தட்டப்படுகிறது.

'மோகன்...... மோகன்...... ஐயோ மோகன்'

தெய்வங்களையெல்லாம் பிரார்த்தித்தபடியே நடுங்கும் கரங்களால் கதவைத் திறந்தாள். வெளியே......

தியாகராஜன். தன் கணவன்.

'தெய்வமே இதென்ன சோதனை வர மாட்டேன், வழக்கம் போலவே வெளியூரிலேயே தங்குவேன் என்றவர் இப்படி வந்து நிற்கிருரே. எனக்கென்னதான் நடக்கப் போகிறது'

ஆனந்தியின் அபத்தமான செய்கைகளும் தடுமாற்றங்களும் தியாகராஜனுக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. அன்றைய பொழுதே அவமாய் நகர்ந்து கொண்டிருக்கிறது.

மாலை 5 மணியிருக்கும். வழக்கம்போல எல்லாரும் ஹோலிலிருக்கிருர்கள் றேடியோ பாடிக் கொண்டிருக்கிறது.

வெளியே யாரோ வரும் சப்தம் கேட்கிறது.

,ஹா! மோகன்தான?'

மோகனேதான். அவனுக்குப் பின்னல் வருவது யார்? வந்தவர்களைத் தியாகராஜன் வரவேற்கிருன். யார் என்று புரியா

மல் ஆனந்தியைப் பார்க்கிறான் தியாகராஜன். அந்த நிலையை நீடிக்க விடாமல் மோகனே பேசுகிறான்- ''எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில்தான் ஆனந்தியின் வீடும் இருந்தது குடும்ப நட்பு; எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு சந்திக்கின்றோம்."-இதைக்கேட்டு தியாகராஜனும் மிகத் தாராளமாகவே உபசரிக்கின்றான்.

மோகனே தொடர்ந்து பேசுகிறான்: ''என்ன ஆனந்தி அப்படிப் பார்க்கிறீர்கள். இதுதான் என் மிஸிஸ் சாரதா..."

சாரதாவின் கையிலிருந்த மகன் ஆனந்தியிடம் போகத் தாவுகிறான். அவள் தூக்குகிறாள்.

''சுட்டிப் பயலாயிருக்கிறானே. என்ன பெயர் வைத்திருக்கின்றீர்கள்?"

''ஆனந்தன்"

இதைக்கேட்டு, - ஆனந்தி-ஆனந்தன்' அந்த மாஜிக்காதலியின் இதயம் ஒரு தடவை இப்படி முணுமுணுத்துக் கொள்கிறது.

ஆனந்தி மோகனைப் பார்க்கிறாள். அவன் தியாகராஜனோடு பேசிக் கொண்டிருக்கிறான்.

அவள் ஆனந்தனை அப்படியே அள்ளியெடுத்து 'என் கண்ணு' என்று தன் இதயத்தோடு ஆனந்தனைப் பிணைத்துக்கொள்வதைப் போலக் கொஞ்சுகிறாள்.

அவள் தேநீர் கொண்டுவர உள்ளே போகிறாள். 'மோகன் இன்னமும் நீங்கள் கனவுகளை விரும்பும் வாலிபனல்ல. என்னை மன்னித்துவிடுங்கள்' ★

# அறிஞர் பெர்னாட் ஷாவின் சிந்தனைகள்

அ. கனகசூரியர்

◉ பல்வலி உள்ளவன், பல்வலி இல்லாதவனை சுகவாளி என நினைக்கிறான். இதே கதை தான் பணக்காரனைப் பற்றி, ஏழை நினைப்பதும்.

◉ சமயப்பற்றற்ற ஒழுக்கம் வேரில்லா மரம்; ஊற்றில்லா ஓடை; மணல் மீதெழுந்த மனை.

◉ ஒருவன், புலியை வேட்டை ஆடும் பொழுது, அதை விளையாட்டு என்கிறான். புலி ஒருவனை வேட்டையாடும் பொழுது அதனை மிருகத்தனம் என்கிறான்.

◉ உலகத்தில் பணம்தான் மிக மிக முக்கியமானது. அது தான் உடல் நலம்; அதுவே தான் வலிமை; பணம் இல்லாத வாழ்வு வீண்.

◉ நமக்குப் பாரமாக இருப்பவர்களை நாம் மன்னித்து விடலாம். நாம் பிறருக்குப் பாரமாகஇருப்பதுமன்னிக்க முடியாத குற்றம்.

★

# கமலாவின் காதலன்!

## எஸ் எம். பஷீர்

அவர்களிருவர்க்குமிடையே நிலவிய நீண்ட அமைதியை சுந்தர்தான் முதலிற்கலைத்தான்.

"பா...லு..."

''ம்...''

''என்ன பேசாமலிருக்கிறாய்...''

''என்னத்தைப் பேசவேண்டும்...''

''இங்கே பார் பாலு நீ என்னைத் தவறாக நினைக்கின்றாய்...''

''இதை நான் நம்ப வேண்டும்...ம்.. சுந்தர்... அழகாப் பேசவும் நன்றாகப் பழகிவிட்டாய்...''

''இல்லை பாலு...''

''சும்மா இரடா! உன் விளையாட்டுக்கு ஒரு உயிரையே பலியிட்டிருக்கிறாயே... சேச்சே நீ என் நண்பனானதே பாவம்...'

''நான் சந்திராவை என்றைக்குமே விரும்பவில்லை பாலு...''

''இந்தச் சொல்லைக் கேட்டுத்தான் அவளும் தற்கொலை செய்து கொண்டிருக்கிறாள்...... இங்கே பார் சுந்தர்... காதலிக்கும்போது இருக்கின்ற தைரியம் ஏன் திருமணம் என்றவுடன் இல்லாமலாகிவிடுகிறது. அவள் எவ்வளவு நெருக்கமாக உன்னோடு பழகினாள். சந்திரா எழுதிய கடிதங்களைக் கூட காட்டினாயே... நீ அவளைக் காதலிக்கவில்லை என்றால் அவளால் எப்படி இத்தனை உருக்கமாக எழுத முடிந்தது...''

''எல்லாம் அவள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டதால்...''

''இல்லை! நீயே அவளைத் தவறானவளாக்க முடிவு செய்ததால்...''

சுந்தருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என்றாலும் நீண்டகாலம் பழகிய தன் ஒரே இனிய நண்பன் என்பதால் என்ன சொல்வதென்றும் புரியவில்லை. மீண்டும் தொடர்ந்து பாலுவே பேசத் தொடங்கினான்.

''சுந்தர். அப்படியானால், அந்தளவுக்கு நல்லெண்ணம் கொண்ட நீ ஏன் சந்திராவின் வீட்டிலேயே இருந்தாய்...... ?''

"ஐயோ என்னை நம்பு பாலு"

''தெரியும் சுந்தர்! சந்திராவின் அழகை விரும்பினாய்; அதற்காக அவளை ஏற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை.

''பாலு! என்னை இப்படி சித்திரவதைப்படுத்தாதேடா...''

''...இது மட்டுமா... அதே நேரத்தில் சந்திராவின் தங்கை கமலாவின் இளமையும் உனக்குத் தேவையாயிருந்தது......''

"போதும் நிறுத்தடா! நான் உண்மையாகவே கமலாவைத்தான் காதலித்தேன்......''

''ஹ...ஹ...ஹா! அழகான வார்த்தைகள். ஆனால் இதைக் கமலா ஏற்றுக் கொள்ள வேண்டுமே... சுந்தர் நீ என் நண்பன் என்பதால் இந்த நேரத்திலும் உனக்காகத் துக்கப்படுகிறேனடா

## கதி என்ன ?



புதிய வேலையாள் :

முதலாளி அற்வாண் சாக ஒரு 10 ரூபா கொடுங்கள் முதல் மாதச் சம்பளத்தில் கழித்துக் கொள்ளலாம்.

முதலாளி :

சரிதானப்பா நீ சொல்கிறாய் மாதக் கடைசியில முதல் மாதச் சம்பளமே கொடுக்க முடியாத நிலைமை எனக்கு ஏற்பட்டால் பிறகு உன்னை நம்பிக் கொடுத்த என் கதி என்ன?

புதிய வேலையாள் : ! ! ! ! ?

இ. அன்ரன்

---

''பாலு என் ஆத்திரத்தைக் இள[illegible] கமலாவும் என்னைத் தா[illegible]தலிக்கிறாள்......''

''சுந்தர் கமலாவையும் ஏமாற்ற நினைக்கின்றாயா? அதை நான் அனுமதிக்க முடியாது...''

''நீ யாரடா அனுமதிக்க: நானும் கமலாவும் திருமணம் செய்து கொள்ளும் காட்சியை நீபார்க்கத்தான் போகின்றாய்''-

இப்படிச் சொல்லிவிட்டு வெளியே நடந்த சுந்தர், ஒரு துடிப்போடு திரும்பி வந்தான். அவன் சொன்னான் :-

''பாலு! நீகமலாவைவிரும்பினாய்... ஆனால் அதற்கு முன்பே கமலா என்னை நேசித்தாள். அவள் உன்னை விரும்பவில்லை என்பதற்காக நான் அவளை ஏமாற்றுகிறேன் என்று பொருளல்ல...... ஆமாம் பாலு!''

இதைக் கேட்ட பாலுவின் இதயத்தில்ஒரு முள் தைக்கத்தான் செய்தது. அவன்சுந்தருக்குப் பதிலளித்தான்: "சுந்தர்! இதைக்கேள்! நான் பொறாமைப் பட்டு இப்படிப் பேசுகிறேன் என்று நினைக்காதே சுந்தர் அப்படியே நான் கமலாவைத் திருமணம் செய்யவே விரும்பியிருந்தாலும்... அவள் – அந்த சந்திரா, ஒரு குழந்தையையும் சுமந்து கொண்டு தற்கொலை செய்துக்கொண்டாளே அதற்குப் பிறகும் நான் கமலாவை விரும்ப முடியாதடா அவளுக்குத் தங்கை தானே இவள்......"

''பாலு......"

''சுந்தர் உன்னைப்பற்றி நான் மிகவும் பெருமையாகப் பேசினேன். எங்கோ இருக்கும் மலைநாட்டில் பணிபுரியப் போனதால், அதை ஒரு பொதுப்பணியாகவே கொள்வதாக நீ சொன்னதால், வளரும் தமிழ்க் குழந்தைகளுக்குப் படிப்பிப்பதே தெய்வீகமானது என்றெல்லாம் கூறினதால் நான் மாத்திரமா பெருமைப் பட்டேன். மலையகமே

பெருமைப் பட்டது. ஆனால் இன்று......... எல்லாரும் என்ன கூறுகிறார்கள். சந்திரா இறந்தது உன்னால் என்கிறார்கள், அவள் சுமந்த சிசு உன்னுடையது என்கின்றார்கள்......"

"சீ! நிறுத்தடா!" சுந்தரின் இந்த அதட்டலைக் கேட்டு பாலுவும் பயந்துவிட்டான்.

"பாலு எப்போதும் வார்த்தைகளை அளந்துபேசு, டேய்! சந்திரா ஏன் செத்தாள் தெரியுமா... அவள் வயிற்றிலிருந்த குழந்தைக்கு உரியவன் அவளை ஏற்க மறுத்ததால்தானடா...... அந்த கோபாலன் இப்போ எங்கே இருக்கிறானென்றே தெரியாததால்தானடா......

"பாலு! சந்திரா அப்படிச் சோஷியலாகப் பழகியதால், எல்லாரையுமே நம்பக் கூடியவள் என்பதால்தானடா கோபாலனால் அவளை இலகுவில் வஞ்சித்து விட முடிந்தது. சந்திரா என்னை விரும்பினாள் கடிதமும் எழுதினாள். நான் விரும்பவில்லை. மிகவும் உணர்ச்சி வசப்பட்ட அவள் கோபாலனுக்கு இரையாகிவிட்டாளடா...

"இதையும் நீ நம்பவில்லையா பாலு?..." -சுந்தர் திடீரென எங்கோ ஓடினான். அவன் திரும்பி வந்தபோது அவனின் கரங்களில் ஒரு கடிதம் இருந்தது. 'இதைப் பாரடா' என நீட்டினான்.

அது இறப்பதற்குமுன் சந்திரா எழுதியது. தனக்கேற்பட்ட கதியை அதில் விபரித்திருந்தாள்: சுந்தர் கமலாவைக் காதலிப்பது தனக்குத் தெரியும் என எழுதியிருந்தாள். எனவே தன் குடும்ப கௌரவத்தை பறிகொடுத்த தன்செயலால் தங்கை கமலாவின் வாழ்வு பாதிக்கப் படக்கூடாது என மிக உருக்கமாக வேண்டிக் கொண்டிருந்தாள்.

அந்தக் கடிதத்தைப் படிக்கப் படிக்க பாலுவின் தலை கவிழ்ந்தது.

"பாலு... நீதானே கூறினாய் காதலிக்க தைரியம் இருக்குமானால் அதே தைரியம் கலியாணம் செய்யவும் வேண்டும் என்று......

"பாலு ஒருத்தி செய்யும் தவற்றையே அவளின் தங்கையும் செய்வாள் என்பது வெறும் பிரமை... நீயேதான் சிறிதுமுன்னர் சொன்னாய் நீயாயிருந்தால் கமலாவை மறந்திருப்[illegible]ன்று பாலு, சீர்திருத்தம் பேசலாம் ஆனால் செயல்தானப்பா முக்கியம். சொல் பாலு நான் செய்தது தவறா?..."

"சுந்தர்" என்னை மன்னித்து விடு.

★

## திடீர் அன்பு!

**தகப்பன் :** தம்பி, இந்த நாயில உனக்கு திடீர் என்று ஏன் அன்பு பிறந்துரிக்கின்றது

**மகன் :** இந்த நாய்தான் எங்கட வாத்தியாருக்கு கடித்தது. அதனால தான்.

**தகப்பன் :** ? ? ?

சுந்தர்

* கவிஞரின் 'இலக்கிய உலகம்' புகழ் பெற்றது. சமீபத்திய இவரின் வெளியீடு 'ஏன் இந்தப் பெருமூச்சு?'

- செம்பியன்

# என்னுங்க



# உங்களைத்தான்!

வி. கந்தவனம்

கதையொன்று சொல்கின்றேன் கட்டி அல்ல
கருத்தோடு காற்ருேடு கலந்த உண்மை
விதிகெட்ட விதிபோலும் யாரோ எங்கோ
விளையாட அவையெங்கள் வினையா யிற்றே
மதியற்ருேர் முறைகேட்டால் வாட்ட முற்ற
வரலாற்றுக் கதைகோடி வகைக்கென் ருென்று
பதியட்டும் உரியோரின் பரந்த நெஞ்சில்
படியட்டும் எண்ணத்தில் விடிய நாளே!

வேறு

என்னுங்க உங்களைத் தாங்க
எண்ணிப் பார்க்க வேணும்
சொன்னீங்க சுளைசுளை யாகச்
சொக்கி நின்றேன் நானும்
என்னுங்க ஆண்டுசள் கூட
எத்தனையோ ஆச்சு
முன்னீங்க சொன்னவை யெல்லாம்
முடிச்சு டனே போச்சு!

ஊரேது பேருமிங் கேது
உழைச்ச மிச்ச மேது
சீரேது சிறப்புக ளேது
சிரிச்ச வேளை யேது
நீரேதோ நீட்டிநி மிர்ந்து
நினைச்ச பாட்டில் வாழும்
ஆராரோ அளப்பதை எல்லாம்
அமிழ்த மென்று கேளும்!

உடலேது உயிர்தன்னு மேது
உழைச்சு உழைச்சு இந்த
சடலங்கள் கொஞ்சமுஞ் சத்தி

இன்றி நொந்து வெந்து
புடலங்காய் போலவு மாச்சுப்
புல்லு முள்ளுக் கல்லு
இடமெல்லாம் தோட்டங்க ளாச்சு
எம்மை வறுமை கொல்லும்!

ஏருத மலைகளு மில்லை
ஏற்றம் மட்டு மில்லை
ஆருது தொழில்களைச் செய்தோம்
ஆக்கம் சற்று மில்லை
மாருத நோய்களோ கோடி
மருந்து சொட்டு மில்லை
சேருச்சு நம்மடை வாழ்க்கை
செக்கு மாட்டுத் தொல்லை!

நாம்வாழப் போய்ப்பிறர் கையை
நக்க ளுங்க ளாசீ
நாமூக்கம் கொண்டுழைத் திட்டால்
நாளை துன்பம் தூசி
நாம் வாழ நம்மடை கையே
நமக்கு வழிகள் காட்டும்
நாம்யார்க்கும் குடியிலை எங்கும்
நமனை அஞ்ச மாட்டோம்!

ஏதேது இப்படி யேநாம்
இருக்கும் பிள்ளை குட்டி
வேதாளக் கொடுமையி னுலே
வெட்டி முறிந்து கெட்டு
போதாத துட்டினுக் கென்று
பொழுது முழுதும் பட்டுக்
கோதாக விட்டிடுங் கொள்கை
குற்ற முங்க மட்டம்!

பள்ளியிலே பிள்ளைக ளைநாம்
படிக்க வைக்க ணுங்க
மெள்ள அவர் படிப்படி யாக
மேலே போக ணுங்க
அள்ளியட நாலிங்கி லீசு
அவங்க பேச ணுங்க
வெள்ளைத்துரை மார்களின் தோட்டம்
வேண்டி ஆள ணுங்க!

பொல்லாத வேலையில் எந்தப்
பொழுதும் தலையை மாட்டி
இல்லாத தொல்லைகள் எல்லாம்
இழுத்து வாரிப் போட்டு
வெல்லாது வெந்தும டிந்தோம்
விழுந்து சிரிக்க ஊரும்
நல்லாய்நாம் வாழ்ந்திடப் பாதை
நன்கு முயன்று பாரும்!
அம்மாளே குடியினில் மட்டும்
அழிஞ்ச காசெம் மட்டு
சும்மாபோய்க் குடிச்சிட்டே ஆடும்
சொகுசில் என்ன கிட்டும்
நம்மாலே முடிந்ததைச் செய்து
நாலைப் பத்தை மடியில்
உம்மாணைச் சேர்த்திட வேண்டும்
உய்ய விடுங்க குடியை!
வெள்ளைச்சி கையினைப் போயிப்
பிடிச்சி ழுத்தீர் வெறியில்
துள்ளிப்போய் தோளப்பன் குடும்பி
துணிஞ்சு வெட்டி மறியல்
மெள்ளப்போய் இருந்திட்டு வந்து
மேலும் என்னை உச்சி
கள்ளத்தால் உள்ளப ணத்தைக்
கரைத்திட் டீரே சிச்சீ!
சேலைகளை வளையலை நல்ல
செவத்தைக் கல்லுச் சிமிக்கி
ஓலைகளை வித்திட்டு நீங்க
ஒழிச்சுச் சூதில் அமுக்கி
தாலியையும் வித்துவுட் டீங்க
தவண்டை அடிக்க நாங்க
சோலிகளை இன்றுதொட் டேனும்
தொலைச் சிடுங்க ஏங்க!

### வேறு

என்றென்றே இவ்வாறும் இன்னு மின்னும்
இன்பொங்கல் சுவைத்தோய்வில் இருந்த வேளை
நன்றான பொறுப்புள்ள நங்கை சொன்னாள்
நன்னாளில் கணவற்கு நல்ல சொல்லை
நன்றென்றே உம்உம்மென் றிருந்து கேட்டு
வென்றாளும் உறக்கத்தில் விழுந்து பட்டான்
என்றுங்க நாமுய்யுங் காலம் என்றாள்
எழுப்பாதே தூங்கட்டும் என்றாள் பாட்டி!



# எழுத்தாளன் மனைவி

பொ. சண்முகநாதன்

நாங்கள் புதுமணத் தம்பதிகள்! அதாவது நான் கமலாவைத் திருமணம் செய்து ஒரு வாரம்தான் ஆகியிருக்கும்; ஒருவருக்கொருவர் இன்னும் மனம் திறந்து பேசவில்லை.

காதலித்து திருமணம் செய்திருந்தால் இதுவரை எவ்வளவோ பேசியிருப்போம். ஆனால் இது அந்த வகையானதல்ல! எனவே இனித்தான் ஒருவருக்கொருவர் மனந்திறந்து பேசிப் பழக வேண்டும். புதியவர்களாகிய எமக்கு 'இதற்கெல்லாம்' கொஞ்சம் வெட்கமும் கூச்சமும் இருப்பது இயல்புதானே!

ஆனால் இந்த வெட்கமும் கூச்சமும் எத்தனை நாட்களுக்கென்று இருப்பது? என் உள்ளத்திலுள்ள ஆசைகளை- அவளிடமிருந்து நான் எதிர்பார்க்கும் உதவிகளை ஒழிவு மறைவின்றிச் சொல்ல அதற்கெல்லாம் அவள் என்ன சொல்கிறாள் என்பதை அறியவேண்டாமா? வெறுமனே சிரிப்பதும் அணைப்பதும் மட்டுமா வாழ்க்கை?

வீட்டிலுள்ள பெரியவர்கள் எவரும் எமது அறைக்குள் நுழைய மாட்டார்கள். 'புது வாழ்வு' ஆரம்பித்தவர்கள் என்னவெல்லாமோ பேசிக்கொள்வார்கள், எப்படியெல்லாமோ நடந்து கொள்வார்கள். அதையெல்லாம் குழப்பக்கூடாது' என்ற எண்ணம் போலும் அவர்களுக்கு!

எங்கள் திருமணத்தை முன்னின்று நடத்துவதற்காக மட்டக்களப்பிலிருந்து வந்த நண்பன் சிவகுமார் மட்டும் இதற்கு முற்றிலும் விதிவிலக்கு. அவன் இப்பொழுது சினிமாவுக்குப் போனது நல்லதாகப் போய்விட்டது.

சிவகுமார் ஓர் அரைப்பைத்தியம் போல் 'பூசைவேளையில் கரடி புகுந்ததுபோல்' நடந்து கொள்வான். சமய சந்தர்ப்பம் தெரியாமல் இந்த நாட்களிலும் இந்த நேரங்களிலும் என்னுடன் மணிக்கணக்கில் பேச விரும்புகிறான்.

சிவகுமார் என்னையும் சினிமாவுக்கு வரும்படி எவ்வளவோ வற்புறுத்தி அழைத்தான். நான் அந்தப் படத்தை ஏற்கனவே பார்த்து விட்டதாகவும், இப்பொழுது தலைவலியாக இருப்பதாகவும் சொல்லித் தட்டிக் கழித்து விட்டேன். எனக்கு ஏனோ தெரியவில்லை இப்பொழுது சில நாட்களாக இந்தச் சினிமாக்களில் அவ்வளவு நாட்டமில்லை.

கமலா எனக்கு முன் அமர்ந்து நான் அவளை நோக்கும் போது நிலத்தை நோக்குவதும், நான் நோக்காதபோது என்னை நோக்கிச் சிரிப்பதுமாக இருந்தாள். நான் அவளைப் பார்க்காதபோது அவள் என்னைப் பார்த்துச் சிரித்ததெல்லாம் எப்படி எனக்குத் தெரிந்ததென்று கேட்பீர்கள். அப்படித் தெரிய நியாயமில்லை தான் என்றாலும் அப்படித்தான் நடந்திருக்கும் என்பது எனது ஊகம்!

நான் கமலாவுடன் மனந்திறந்து பேச ஆரம்பித்தேன்:—

''கமலா! நான்ஓர் அரசாங்க ஊழியன் அல்லன். தனிப்பட்ட ஒரு நிறுவனத்தில்தான் பணி புரிகிறேன். அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு வசதிகளோ விடுமுறைச் சலுகைகளோ எனக்குக் கிடைப்பதில்லை. சராசரியாகத் தினமும் பன்னிரண்டு மணித்தியாலங்களை வேலையிலும் அதற்குப் போய் வருவதிலுமாகக் கழித்து விடுவேன். வாரத்தில் ஒரு நாள் மட்டுமே. கிடைக்கக் கூடிய விடுமுறை நாட்களில் கூடச் சில சமயம் ஒற்றைக் கதவுக்குப் பின்னால் வேலையிருக்கும்"

''தெரியும்; கேள்விப்பட்டேன்" என்று கமலா புதுப் பெண்ணுக்கே உரிய நாணத்துடன் கூறினாள்.

''இது தவிர நான் ஒரு புத்தகப் பூச்சியுங் கூட. பழந்தமிழ் இலக்கியங்கள் தொடக்கம் இக்கால இலக்கியங்கள் வரை எதையும்விட்டுவைக்க விரும்பாதவன்.



"நீங்கள்சொன்ன டொக்டரை இன்று சந்தித்தேன்......"

''நான் உங்களை அனுப்பியதாகக் கூறினீர்களா ?

''கூறினேன்......''

'' அவர் என்ன சொன்னார் ...?"

''மருந்துக்குரிய செலவை முதலிலேயே கட்டும்படி கேட்டார்''

---

ஆனால் என்னால் இப்போது தெரிந்தெடுக்கப்பட்ட மிகச் சிறந்த நூல்களையும் பத்திரிகைகளையும் கூட படிப்பதற்கு நேரமில்லாமல் இருக்கிறது. நேரம் போவது தெரியாது உடம்பைக் கூடக் கவனியாது படித்துக் கொண்டே இருப்பது என் பழக்கமாகி விட்டது.''

''அதுவும் தெரியும். உங்கள் மேசையையும் அலுமாரியையும் பார்த்தால் யாருக்குத்தான் அது தெரியாது.''

''இதைவிட வேடிக்கை இந்த இலட்சணத்தில் நான் ஓர் எழுத்தாளனாகவும் இருக்கிறேன். சமூகத்துக்கு என் எழுத்தால் என்ன நன்மைகள் ஏற்படுகிறதோ அது வேறு விஷயம். ஆனால்மாதத்தில்

குறைந்தது ஒரு கதையோ அல்லது ஒரு கட்டுரையோ எழுதா விட்டால் எனது மனம் சாந்தியடைவதில்லை. குறைந்தது நூறு பேராவது என் எழுத்தைப் படித்தால் — நாலு பேராவது என் எழுத்தைப் பாராட்டினுல் அதை விட மகிழ்ச்சி எனக்கு வேறு இருக்க முடியாது.''

''இதையெல்லாம் கூட உங்கள் தங்கை மூலம் அறிந்தேன். இந்த நாலைந்து நாட்களுக்குள்ளேயே அந்தக் கதை கட்டுரைகள் அனைத்தையும் படித்தும் முடித்து விட்டேன்''

''முன்பு நண்பர்கள் பலருக்கும் சொன்னதை இப்பொழுது உனக்கும் சொல்லுகிறேன். நான் சாகும் வரை இந்தப் படிக்கும் பழக்கமும் எழுதும் வழக்கமும் என்னை விட்டுப்போகாது. இந்தத் துறையில் உனது உதவியும் ஒத்துழைப்பும் எனக்குக் கிடைத்தால் நான் இன்னும் கூடுதலாகப் படிக்கவும் அதிகமாக எழுதவும் முடியும் என எதிர்பார்க்கிறேன்.''

''அப்படி என்ன உதவியும் ஒத்துழைப்பும் என்னுல் தர முடியும் என்று கொஞ்சம் சொன்னுல்...'' கமலா முடிக்கவில்லை நான் தொடர்ந்தேன்.

''எனது அரைநாள் பொழுது வெளிவேலையிலும் சுமார் ஏழோ எட்டு மணித்தியாலங்கள் உறக்கத்திலுமாகக் கழிந்து விடுகிறது. எஞ்சி இருப்பதோ நாலு அல்லது ஐந்து மணித்தியாலங்களே! இந்தக் குறுகிய நேரத்தில்தான் இலக்கியப் பணிகளுக்கும் நேரம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் எவ்வளவைப் படிக்க முடியும்? எவ்வளவைத் தான் எழுதவும் முடியும்? என் மனத்தில் தோன்றும் எத்தனையோ கற்பனைகள் நேரமின்மை காரணமாக உருப் பெருமலேயே மாண்டு மடிந்து விடுவதுண்டு. இத் துறையில் எனக்கு நீ உதவி செய்ய முடியாது என்பது உண்மைதான். ஆனுல் இன்னெரு விதத்தில் நீ உதவி செய்ய முடியும்.........''

நான் சிறிது நிறுத்திக் கமலாவைக் கவனித்தேன். அவள் 'எப்படி' என்பதுபோல் என்னைப் பார்த்தாள். நான் தொடர்ந்தேன்:

''எப்படியென்முல் நான் எழுதும் கதை கட்டுரைகளை எனது கையெழுத்துப் பிரதியைப் பார்த்து பிரதி பண்ணி பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை நீ மேற்கொள்ளலாம். இதனுல்பிரதிபண்ணும்நேரத்தை நான் இன்னெரு கதையோ கட்டுரையோ எழுத அல்லது ஏதாவது படிப்பதில் செல விடலாம் அல்லவா?"

''.....................''

''பகலில் வெளி வேலை. இரவில் பதினெரு பன்னிரண்டு வரை எழுத்தும் படிப்பும். சில சமயம் இடையில் கண்கள் செருகிக் கொண்டே போகும். களைப்பு மிகுதியாக இருக்கும். அப்பொழுதெல்லாம் புத்துணர்ச்சி பெற்றுப் புது உற்சாகத்துடன் தொடர்ந்து வேலை செய்ய

வேண்டுமானுல் ஒரு கப் சூடாக தேநீர் அருந்த வேண்டும் போல் இருக்கும். ஆனுல் நான் மட்டும் விழித்துக் கொண்டு இருக்கும் அந்த நேரத்தில் ஊரே உறங்கிக் கொண்டிருக்கும். நானே யாருக்கும் இடைஞ்சல் கொடுக்கக் கூடாது என்ற கொள்கையுடையவன். இப்பொழுது நீ வந்திருக்கிருய். நீ என்னுடையவள். நான் உன்னுடையவன். விரும்பினுல் நீ எனக்கு......''

''...............''

''நடுச்சாமத்தில் படுக்கைக்குப் போகும் நான் விடிந்து வெகு நேரமாகியபின்பே எழும்புவேன். அவசர அவசரமாக வேலைக்குப் புறப்படுவேன். அப்பொழுதெல்லாம் போதிய ஓய்வு எடுக்காது உழைத்ததனுல் எனக்கு மிகுந்த அலுப்பும் மறதியுமாக இருக்கும். பேனுவுக்குள் மைநிரப்பமறந்திருப்பேன். பஸ்ஸுக்குச் சில்லறை எடுத்துப்போக மறந்து விடுவேன். இன்னும் எத்தனையோ பிரச்சனைகள் இவற்றிற்கெல்லாம் எனக்கு இப்பொழுது புதிதாகக் கிடைத்திருக்கும் நீ......"

"கொடுமை! கொடுமை! ஒரு பெண்ணை ஓர் ஆண் அடிமைப் படுத்துவதென்றுல் - அதுவும் இந்த இருபதாம் நூற்றுண்டில்...! அது கொடுமையின்றி வேறென்னவாக இருக்க முடியும்?" என்றவாறு அழையாத விருந்தாளியாக உள்ளே நுழைந்தான் நண்பன் சிவகுமார்.

'பகலில் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அதுவும் பேசாதே!' என்பார்கள். அது எவ்வளவு சரியாகிவிட்டது. என எண்ணியவாறு நான் வாயடைத்துப்போய் இருந்தேன்.

கமலா வெட்கத்தால் நாணிக் கோணியபடி அவ்விடத்தைவிட்டு மெல்ல நழுவி விட்டாள்.

சினிமாவுக்கென்று போயிருந்த சிவகுமார் நுழைவுச் சீட்டு கிடையாத காரணத்தால் வேளைக்கே திரும்பிவிட்டான். நான் கமலாவுடன் பேசிக்கொண்டிருந்த கடைசிப்பகுதியை கேட்டுவிட்டான் போலிருக்கிறது. எனக்கு முன் வந்து நின்று அவன் பேச்சாளனுக மாறிப் பொரிந்து தள்ள ஆரம்பித்துவிட்டான்.

''டேய் மணி! நீ எவ்வளவோ படித்தவன். எவ்வளவோ எழுதிக் குவித்தவன். அப்படி இருந்தும் பெண்களைப்பற்றி இத்தனை மோசமான அபிப்பிராயமா கொண்டிருக்கிருய் என்பது இன்றுதான் எனக்குத் தெரிகிறது. பாரதியையும் பாரதிதாச



பெண் படியாதவளாக இருந்தால், எவனையும் மணக்க அவள் சம்மதிப்பாள்; படித்து நாகரிகம் பெற்றவளானுல் இயற்கையாகவே தன்னைப் போல மாப்பிள்ளையையே விரும்புவாள்.

— காந்தியடிகள்

ளேயும் படித்ததெல்லாம் வெறும் பொழுது போக்குக்காகவா?''

"புரட்சிக் கவிஞர்களும் புதுமைக் கவிஞர்களும் தோன்றி பெண் அடிமைபற்றியும் பெண் விடுதலைபற்றியும் இத்தனை குரல் எழுப்பிய பிறகும்-அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டிலா" நீ பெண்ணை அடிமைப் படுத்த வேண்டும்? இதைவிடக் கொடுமை வேறென்ன இருக்கமுடியும்? படித்தவனாகவும் எழுத்தாளனாகவும் விளங்கும் நீயே இப்படி நடந்துகொண்டால் இதைவிட வெட்கக்கேடு வேறென்ன இருக்க முடியும்? "

"மனைவி என்றால் அவள் முழுக்க முழுக்கக் கணவனுககு கட்டுப்பட்டவள். அவனதுஆசைகளையும் தேவைகளையும் நிறைவேற்றுவதுதான் அவளது கடமை. அவள் தனக்கென்று எந்தவித ஆசைகளையோ தேவை வைத்திருக்கக் கூடாது. இதுதான் நீ மனைவிபற்றி வைத்திருக்கும் மகத்தான அபிப்பிராயம் போலும்! மனைவி என்றால் அவள் கணவனுக்குப் பணிவிடைகள் செய்வதற்குரிய வேலைக்காரப் பெண் என்பதுதான் உனது கருத்தா ''

''அவளுக்கு உதவி செய்ய உனக்கு நேரமும் இல்லை. முடியவும் முடியாது என்கிறாய். ஆனால் அவள் மட்டும் உனக்கு உதவி செய்ய வேண்டும். அதற்கெல்லாம் நேரமு ! கிடைக்கும் முடியவும் முடியும் என நம்புகிறாய்! பகலிலே உனக்கு வெளியிலே வேலையென்றால் அவளுக்கு வீட்டு வேலைகள் இருக்கு என்பதை மறந்து விட்டாயா? இரவிலே உனக்கு படிக்கிற எழுதுகிறவேலைகள் என்றால் அவளுக்கு தையல் போன்ற வேலைகள் இருக்காதா? நீ மட்டுமா உழைத்துக்களைக்கின்றாய்? அவளும் உழைத்துக்களைக்க வேண்டித்தானே இருக்கிறது? இந்த நிலையில் நீ உன்னுடைய சுமையில் கூட ஒரு பகுதியை அவள் மீது சுமத்துவதென்றால், அது பெண் அடிமை என்பதன்றி வேறென்ன?''

''ஒவ்வொருவரும் தங்கள் பிரச்சனைகள்தான் பெரியது. மற்றவர்களுடையதெல்லாம் அற்பமானதுஎன்று எண்ணுகிறார்கள். அதுபோலத்தான் நீயும் எண்ணிக்கொண்டிருக்கிறாய். தயவு செய்து நீ கமலாவை அடிமைப் படுத்துவதை இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் கொடுமைப்படுத்துவதை விட்டுவிடு. ஒருவருக்கொருவர் உதவி செய்து துன்பத்தையும் சரி மகிழ்ச்சியையும் சரி சமமாகப் பகிர்ந்து கொள்வதுதான் இல்வாழ்க்கை என்பதை உணர்ந்து விடு"

இவ்வளவையும் பேசிய சிவகுமார் களைத்துவிட்டான் போலிருக்கிறது. சாப்பிட்டுவிட்டுப் பேசாமல் போய் படுக்கையில் விழுந்து விட்டான்.

நான் எவ்வளவு தவறு செய்துவிட்டேன். 'கமலாவுடன் அப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாது' என்று நினைத்துக்கொண்டேன்.

'நான் நினைக்கக் கூடாததை நினைத்து விட்டேன். சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டேன். கமலா என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ? போயும் போயும் இவருக்கா வாழ்க்கைப்பட்டோம் என எண்ணிக் கொண்டிருப் பாளோ? இனி நான் எப்படி அவளிடம் மன்னிப்புக் கேட்பது?' இந்தச் சிந்தனைகளோடு தலை குனிந்தபடி இருந்தேன்.

"இஞ்சருங்கோ" என்ற மெல்லிய குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து "உங்களைத் தானே" என்ற குரலும் கேட்டது நிமிர்ந்து பார்த்தேன், கமலா நின்றாள், அவள் சொன்னாள்:

"நான் உங்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் பற்றிச் சொன்னீர்கள். அதற்கெல்லாம் நான் பதில் தருவதற்கு முன் உங்கள் நண்பர் வந்து விட்டார். அவர் பொரிந்து தள்ளியது எல்லாவற்றையும் கூட நான் கேட்டுக் கொண்டுதான் நின்றேன். அவருக்கு உலக அறிவும் சிந்தனைத் தெளிவும் குறைவு போல் தெரிகிறது. இல்லாவிட்டால் இப்படியெல்லாம் பேசியிருக்க மாட்டார்."

"பெண்களுக்கு அநேகமாக ஆண்களைப்போல் அவ்வளவு பொறுப்பான வேலைகளோ, வெளி உலகக் கவலைகளோ, அலைச்சல்களோ கிடையாது. அவர்களுக்கு ஆண்களைவிட ஓய்வும் மிகுதியாகக் கிடைக்கிறது. ஏன் உங்கள் போன்ற எழுத்தாளர்கள் எழுதிக் குவிப்பதையெல்லாம் அநேகமாக என் போன்ற பெண்கள்தானே படித்துத் தள்ளுகிறார்கள். இந்தக் காரணத்தினால் தான் ஆண்டவன் குழந்தைகளைப் பெறுவது அவர்களைப் பராமரிப்பது போன்ற பொறுப்பான வேலைகளையெல்லாம் பெண்களிடம் ஒப்படைத்துள்ளார்."

"இதெல்லாம் உங்கள் நண்பருக்குத் தெரியாது போல் இருக்கிறது. உங்களுக்கு வெளிவேலைகள் இருப்பது போல் எங்களுக்கும் வீட்டு வேலைகள் இருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் அதெல்லாம் நண்பகல் பன்னிரண்டு ஒரு மணியுடன் சரியாகி விடுகிறது. அப்புறம் அநேகமாக ஓரே ஓய்வுதானே! இரவில் தையல் போன்ற வேலைகள் எமக்கு எந்நாளும் இருப்பதில்லை. அப்படி என்ன தையல் கடைகளா நாம் வைத்திருக்கிறோம். எப்போதாவது சில நாட்களிலும் நேரங்களிலும் தான் அதெல்லாம் இருக்கும். மற்றும்படி நாம் சும்மா தானே இருக்கிறோம்! எனவே ஆண்களைப் போல் 'களைப்போ அசதியோ நாம் அதிகமாக அடைவதில்லை!"

"மனைவி கணவனின் வேலைக்காரி அல்ல என்பது சரிதான்! ஆனால் அதைவிட உயர்ந்த பணிப் பெண் என்றாலும் கூட அதில் பிழை இல்லையே! கணவனுக்கு எது எது எப்போது எப்போது தேவைப்படுகிறதோ அவைகளையெல்லாம் அவ்வப்போது அவன் கேட்குமுன்பே செய்து விடுவதில்தான் அவளுக்குப் பெருமை இருக்கிறது. இதுபோன்ற பணி

விடைகளில் அவள் அடையும் திருப்தி, பூரிப்பு, -மகிழ்ச்சி அப்பப்பா அதெல்லாம் கூட எங்களுக்குத்தான் தெரியும்"

''நிறையப்படிக்க வேண்டும் ஏராளமாக எழுத வேண்டும் என்பதில் உங்களுக்குள்ள அதே ஆர்வம் எனக்கும் உண்டு இந்த வகையில் உங்களுக்கு உதவியும் ஒத்துழைப்பும் கொடுக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அதையெல்லாம் நான் பெருமையாக வல்லவா கருதுவேன். இதுவரை 'நான்எழுதியகதை; நான்எழுதிய கட்டுரை' என்றெல்லாம் நீங்கள் உங்கள் படைப்புகளைப் பற்றி பெருமையடைந்து வாழ்ந்தீர்கள் இனிமேல் நானும் கூட அதில் பங்குபெறுவேன்! 'என் கணவர் எழுதியது' என்றெல்லாம் பெருமைப்படுவேன். இத்துறையில் உங்களுக்கு உதவி செய்யக் கொடுத்து வைப்பது எனக்கு கரும்பு தின்பதுபோல் இருக்கும். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்.''

''உழைத்துக் களைத்த போது உற்சாகத்திற்கு தேநீர் வேண்டும் என்கிறீர்களே! அதையெல்லாம் நீங்கள் கேட்டா நான் தர வேண்டும்? கேட்காமலே தருவது தானே எனக்கு அழகு! அலுப்பினாலும் மறதியினாலும் தள்ளாடித் தடுமாறும் உங்களுக்கு நான் உதவி செய்யாமல் வேறு யார் செய்வார்கள்! அப்படி யாராவது செய்யத்தான் விடுவேனா? அது சரி நேரமாகி விட்டது சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொள்ளுங்கள். நாளை தொடக்கம் நீங்கள் எழுதுவதெல்லாவற்றையும் பிரதி எடுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பும் வேலை என்னுடையதுதானே!"

கமலா எனக்குச் சாப்பாடு போடத் தயாராகிவிட்டாள். பெண்களைக் கேலி செய்தும் கிண்டல் பண்ணியும் எத்தனையோ கதை கட்டுரைகள் எழுதிய நான் அன்று முதல் தடவையாக ''பெண்ணின் பெருமை" பற்றி ஒரு கட்டுரை எழுதிவிட்டுத்தான் படுக்கையில் விழுந்தேன். அன்று வழக்கத்தை விட கொஞ்சமும் கூட களைத்த உணர்வு இருக்கவில்லை. ★

## மரத்தில் ஒளிக்கவில்லை ?

சிறைக் கைதி ஒருவன் சிறையிலிருந்து தப்பி தனது வீட்டிற்கு வந்து ஒளித்திருந்தான். மறுநாள் அவனைப் பிடிக்க திடீரென அங்கு பொலீசார் வந்தபோது, அவன் ஒரு மரத்தில் ஏறி இலைக்குள் மறைந்து கொண்டு, தனது மகனிடம் யார் என்ன கேட்டாலும் 'நான் இங்கு ஒளிக்கவில்லை' என்று கூறும்படி சொன்னான்.

வீட்டினுள் பிரவேசித்த பொலிசார் பையனிடம் ''உனது தந்தை இங்கு வந்தாரா'' என்று கேட்டனர்.

அதற்கு "இல்லை ஐயா. அவர் மரத்தில் ஏறி ஒளிக்கவில்லை" என்று பதிலிறுத்தான் கைதியின் மகன்.

—யோகன்

★ சென்ற இதழ்த் தொடர்ச்சி



# தவறுகள் வாழ்கின்றன

து. வைத்திலிங்கம்

இந்த ஆண்களுக்கு இருக்கும் துணிச்சலே அலாதியானது தான்.

என் உள்ளத்தின் பலவீனத்தை அத்தான் பயன்படுத்திக் கொண்டார். என் மூளையும் எங்கே போனதென்றுதான் இன்றும் என்னையே நோகின்றேன்.

வீட்டில் தலைவி இல்லாத நிலை; ஆணும் பெண்ணும் தனித்திருந்த வேளை; பெண்ணின் இயல்பான பலவீனம்; ஆணின் துணிந்த மனம்! வேறென்ன வேண்டும்?

முறைகேடான செயல் நடந்ததை நானும் அத்தானும் வேறு யாருக்கும் தெரியாது என்றுதான் எண்ணியிருந்தோம்! பின்னுக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அறியாமலே-செய்துவிட்ட காரியத்தின் பலாபலன் போகப் போகத்தானே தெரிந்தது.

அக்கா பவானி நர்சிங் ஹோமில் இருந்து வீடு திரும்பி விட்டாள். உடல் சற்றுத் தேறி இருந்தது.

''என்ன சரசு முன்போல் உற்சாகமாய் இல்லையே? என்ன காரணம்" அக்காதான் கேட்டாள்.

''ஒன்றுமில்லை அக்கா" நான் சிரித்து மழுப்பினேன். ஆனால் அகத்தின் நிலையை முகம் காட்டி விடுமே!

அன்று மாலை, கிணற்றடியில் பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருந்தேன். ஒரு மயக்க நிலையில் தலைசுற்றியது. குபுக், குபுக் என்று வாந்தி எடுத்தேன்.

''இதென்ன சரசு!'' -அக்கா ஓடோடி வந்தாள்.

''என்னவோ தெரியவில்லை அக்கா! ஒரு வேளை உணவு செமிக்கவில்லைப் போல் தெரிகிறது.''

செமிக்கவில்லையா? நேற்றும் வாந்தி எடுத்தாய். இன்று காலையிலும் எடுத்ததைப் பார்த்தேனே!"

நான் மௌனமாக நின்றேன். என்னை அறியாமல் கண்களில் நீர் முட்டியது.

"அக்கா...!" - இதற்குமேல் என்னால் ஒன்றும் பேச முடியவில்லை.

''என்ன சரசு? என்ன நடந்தது?"-அக்கா பதைபதைத்தாள்.

''அக்கா என்னை மன்னித்து விடு! நீயில்லாத வேளையில்...... அத்தான்...!''-நான்விம்மினேன்.

''ஐயோ சரசு'' அக்கா கத்தி விட்டாள்.

''நானென்னடி செய்வேன்? அம்மா வந்து கேட்டால் நான் என்னத்தைச் சொல்வது? இப்

படி என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டாயே!''–தொடர்ந்து கூறிய அக்கா விக்கி விக்கி அழுதாள். நானும் அழுதேன். அதைவிட நான் வேறு எதைச் செய்ய முடியும்?

''அக்கா என்னை மறந்து பிழை செய்து விட்டேன்! எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை!" - இப்படிக் கூறிக் கொண்டே அவளின் கைகளைப் பிடித்தேன். ஆனால் அவளோ என் கைகளை உதறிவிட்டு தன் அறைக்குள் ஓடோடி விட்டாள்.

வீட்டில் பூரண அமைதி நிலவியது. வரப்போகும் புயலுக்கு இது அறிகுறியா?

''பவானி!" – அழைத்துக் கொண்டே அத்தான் வந்தார். பதிலில்லை!

வீட்டுக்குள் சென்ற அவர் உடனே பின் பகுதிக்கு வந்தார்.

''சரசு, என்ன நடந்தது? ஏன் பவானி ஒன்றுமே பேசாமல் இருக்கிறாள்?"

''அத்தான்...! அக்காவுக்கு எல்லாம் தெரிந்து விட்டது......! நான்.........!"

தலையில் கை வைத்துக் கொண்டே அத்தான் அப்பால் சென்றார். இரவு நீண்டது. யாரும் சாப்பிடவில்லை. சாப்பிடக்கூடிய நிலையிலா இருந்தோம்?

காலை மலர்ந்தது. இரவு முழுவதும் தூக்கமில்லாததாலும் துயரினால் உள்ளத்தில் பாரம் ஏறியிருந்ததாலும், கலங்கிய விழிகளுடன், உடல் தள்ளாடியபடி காரியங்களை மௌனமாகக்கவனித்துக் கொண்டிருந்தேன் காலை மலர்ந்தது என்பது என்னவோ உண்மைதான்! ஆனால்.........

காப்பியை எடுத்துக்கொண்டு அக்காவின் அறைக்குள் சென்றேன். கதவு ஒருக்களித்து சாத்தியிருந்தது. மெல்லத் திறந்து கொண்டே உள்ளே சென்றேன்.

கிடத்திவிட்ட சிற்பம் போல் அக்கா படுத்திருந்த காட்சியைக் கண்டேன். அவள் எவ்வளவு அழகாகத் தூங்குகிறாள்! முகத்தில் அவளுக்கே உரித்தான புன்சிரிப்பின் கோடுகள்! தூக்கத்தைக் கலைக்கலாமா?

''அக்கா!" — மெதுவாக அழைத்தேன்.

மீண்டும் இரண்டு மூன்று தரம் அழைத்ததும் அசைவு ஒன்றும் இல்லை. என்னுள் ஏதோ ஓர் உணர்வு!

சாதாரணமாக வரக் கூடிய உணர்வா இது......!

தண்டுபோல் கிடந்த அவள் கையைத் தூக்கினேன், இது என்ன?

சில்என்றுகுளிர்ந்தது. உணர்வில்லாமல் அந்தக்கை மறுபடியும் கீழே விழுந்தது.

எனக்கு விளங்கி விட்டது!

முகத்தில் புன்சிரிப்பின் கோடுகளை நெளிய விட்டபடி மோனத் தூக்கத்திலா பவானி ஆழ்ந்திருந்தாள்?

''ஐயோ அக்கா!" – நான் வீறிட்டு அலறினேன்.

தன்பணியைச் செய்துவிட்ட மோனத் திருப்தியில் அந்த தூக்க மருந்துப் போத்தில் மேசைமேல் காட்சி அளித்தது. அதன் துணை

யைத்தான் பவானி நாடியிருக்கின்றாள் போலும்!

பக்கத்தில் ஓர் கடிதம்!

ஓடிச்சென்று எடுத்தேன். பாபரவென்று என் பார்வை அதில் ஓடியது.

''என் முடிவை நானே தேடிக் கொள்கின்றேன். குழந்தையில்லாமல் எனக்கு வாழ்வே கசந்து விட்டது. என்னால் ஒருவருக்கும் பிரயோசனம் இல்லை. என் தங்கையை என்றாலும் என் கணவர் மணந்து குழந்தைகள் பெற்று வாழட்டும். சரசுவுக்கு என் வாழ்த்து!

கடிதம் என் கையிலிருந்து நழுவியது.

''அக்கா, நீ எவ்வளவு தியாகத்தைச் செய்து விட்டாய்! என் குற்றத்தை மறைத்து - பழியை உன்மேல் போட்டுக் கொண்டாயே! அக்கா என்னை மன்னிப்பாயா ?.

நான் அழுதேன்!

நான் இன்றும் அழுதுகொண்டுதான் இருக்கிறேன். வருடா வருடம் அவள் படத்துக்கு மாலை அணிவித்து அவளிடம் பாவமன்னிப்புக் கேட்டால் மட்டும் என்பாவம் தொலையுமா என்ன?

''என்ன சரசு, அப்படியே நின்றுவிட்டாயே!"

அழைத்துக்கொண்டு வந்து என் கணவர். அதாவது அக்காவின் கணவராய் இருந்த அத்தான்தான்! கைகளில் குழந்தை ரவி!

என் சிந்தனை கலைந்தது. என் ரவியை கைகளில் வாங்கிக் கொண்டு அவனை முத்தமிடும் சாக்கில் என் கண்ணீரை மறைத்துக் கொண்டேன்!

★

---

★ குட்டிக் கதை

# அகாரணம்

அதிகாலையிலேயே எழுந்து விட்டேன். அறைக்கு வெளியே வந்து பார்த்தேன். காலைப்பனி இன்னும் நன்றாகக் கலையவில்லை. மூட்டத்திற்கூடாகக் கட்டிடங்களின் கோடுகளும் மரங்களும் கலங்கலாகத் தெரிந்தன. அந்த மரங்களிடையே ஒரு மரத்திற்கு கீழே ஒரு நாய்க்குட்டியும் – அதைக் குட்டி என்றும் சொல்ல முடியாது. குட்டிக்கும் முழு வளர்ச்சிக்கும் இடைப்பட்ட ஒரு மலர்ச்சிப் பருவம் – ஒரு காகமும்- பனிக்கூடாக வந்துவிட்ட மஞ்சள் வெய்யிலில் அகப்பட்டுப் பொன்னிறமாகத் தெரிந்தன. நாய்க்குட்டிகாகத்தைக்கலைப்பதும் காகம் சற்றே பறந்து பின்னர் வந்து அதனைச் சீண்டுவதும் அவற்றுக்கிடையே ஒரு விளையாட்டுப் போல நடந்துகொண்டிருந்தைப் பார்க்க மனதிற்குக் களிப்பாய் இருந்தது. நான் எனது அறைக்குட் சென்று எனது துவக்கை எடுத்துக்கொண்டு வந்து குறிபார்த்துச் சுட்டேன். தப்பவில்லை. நாய்க்குட்டி செத்துப் போயிற்று.

— செ. வே. கா.

நன்றி-
UNIVERSITY MAGAZINE 1967



# து
# ற
# வி

வே. குமாரசாமி

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்
எல்லோரும் தேடுமொரு
செல்வம் என வந்தேன்
கன்னி அவளொருத்தி
கட்டுடலைப் பெற்றிருந்தும்
பின்னி இழுக்கின்ற
பேரழகு இன்மையினுல்

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்

காளை ஒருத்தனவன்
காசாசைக் காரன், அக்
காளை மணமுடித்தான்
கன்னிதனை அணைத்தான்

செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்

என்னுல் எல்லாமுண்டு
எனினும் அவர்களுக்கோ
பொன்னினும் மேலாம்
புதல்வர்ப் பேறின்மையினுல்

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்.

தீர்த்தம் பலஆடித்
தெய்வம் பலவேண்டி
சேர்த்த எனைக் கரைத்தார்
சேர்ந்தார் பெற்றுர்பிள்ளை

செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்.

புத்தியிலாப் பிள்ளையென
செத்தார்க் கழுவதுபோல்
நித்தம் புலம்புகிறார்
நீளும் துயர்துடைக்க

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான்தான் செல்வம்

வித்தை புகட்டுதற்கு
வேண்டும் ஒழுங்கெல்லாம்
சொத்தாம் எனை வைத்துப்
பிய்த்துப் பிடுங்குகிறார்

செல்வம் என வந்தேன்
எனவே இனிச்செல்வேன்.

மாடு மனை மக்கள்
மாண்பு புகழ்எல்லாம்
தேடி அலைகையிலே
திரைகொணர்ந்து சேர்த்தாற்போல்

செல்வம் என வந்தேன்
ஆமாம் யான் தான் செல்வம்.

ஆசைக் கடிமையாய்
அல்லல் பலவடைந்தே
வேசை எனஎன்னை
வைதே வெறுத்துவிட்டார்

செல்வம் என வந்தேன்
எனவே இனிச் செல்வேன்.



## அஞ்சலி

பாரதி நின் பாட்டாலே
பாமரர்க்கும் விழி யளித்தாய்
தமிழன்னை விலங் கொடித்தாய்
தாவில் புகழ் கொண்டு சென்றாய்—
நீ வாழி

# ஒலிவர் ருவிஸ்ட்

ஏ. ரீ. பொன்னுத்துரை B. A.

யூதக் கிழவனும், சாளி பேர்சும், டொக்கின்சும் கடுதாசிக் கூட்டம் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். திடீரென டொக்கின்ஸ் சத்தமிடுகிறான். "அவதானியுங்கள். மணிச்சத்தம் கேட்கிறது" என்று கூறியபடி மேல்வீட்டுக்கு செல்கிறான். சிறிது நேரம் தாமதித்து யூதக் கிழவனுக்கு ஏதோ இரகசியமாகக் கூறுகிறான்.

"என்ன? தனியவா" யூதக் கிழவன் கத்துகிறான். 'ஆம்' என்பது போல தனது தலையை அசைத்தபடி ரொபி கிறக்கிரை உள்ளே விடுகிறான். திருடுவதற்கு செய்த முயற்சி தோல்வியில் முடிந்ததையும் ஒலிவர் சூடுபட்டு காயமுற்றதையும் ரொபி யூதக் கிழவனுக்கு கூறுகிறான். தங்களைச் சிலர் நாய்களுடன் கலைத்தமையால் அவ்விடத்தில் இருந்தும் ஓடவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும் ஒலிவரை அந்த இடத்தில் விட்டு விட்டே வந்தோம் என்ற செய்தியையும் கூறுகிறான். இது பற்றி வேறு எதையுமே கேட்க விரும்பாத யூதக் கிழவன் கர்ஜித்தான்; தனது தலை மயிர்களை கை விரல்களால் பிசைந்தபடி அந்த அறையையும் வீட்டையும் விட்டு வெளியேறியது எதற்கோ?

## 11

யூதக் கிழவன் தெருவில் முடக்கை அடைந்து விட்டான். கிறக்கிற் கூறிய செய்தியின் தாக்கம் இப்போதும் அவன் முகத்தில் பிரதிபலித்தது. எல்லா முக்கிய தெருக்களையும் தாண்டித்தாண்டி இறுதியாக கள்வர்கள் தங்கும் முக்கிய ஒரு பொது இடத்தை அடைகிறான். நேராக நடக்கிறான். ஒரு அறைக் கதவை திறந்தபடி யாரோ ஒரு நபரை தேடுவது போல தனது கையை இமைக்கு மேல் வைத்தபடி கூர்ந்து நோக்குகிறான். இரண்டு காஸ்லேட்டுகளால் அறை பிரகாசமடைந்திருக்கிறது. சுருட்டுப் புகை அந்தஅறைமுழுவதும்படர்ந்திருந்ததால் எதையுமே பார்ப்பது சற்று கஷ்டத்துக்குரிய காரியம் தான். ஒரு மேசையைச் சுற்றிக் குவிந்திருந்து குடிப்பதிலும் சத்தம் செய்வதிலும் களி கொள்ளும் ஆண்கள் பெண்களை அவனல் பார்க்க முடிந்தது. யூதனின் பார்வை முகத்துக்கு முகம் பாய்ந்து செல்கிறது. இறுதியில் முக்கியமானவனின் கண்களைப் பார்த்து ஒரு அசுகை காட்டிவிட்டு அந்த அறையை விட்டு அகல்கிறான். யூதனைத் தொடர்ந்து சென்ற முக்கிய பேர்வழி யூதக்கிழவனைப் பார்த்து "ஏதாவது செய்ய வேண்டுமா?" என்கிறான்.

"அவன் இங்கேதானே இருக்கிறான்?" யூதனின் கேள்வி இது.

''யாரை மொங்ஸ்கை (Monks) தானே குறிப்பிடுகிறீர்கள்"

''சப்தம் போடாதே. ஆமாம் அவனைத்தான் குறிப்பிடுகிறேன்''

''அவன் இவ்விடத்தில் இல்லை. ஆனால் அவனை நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். பத்து நிமிடங்கள் தாமதிப்பீர்களானால் அவனைக் காணலாம்''

''தாமதிக்க நேரமில்லை. அவனைக் காண வந்ததாக அவனுக்கு கூறும் அத்துடன் இன்றிரவு என்னைச் சந்திக்கும்படியும் கூறும்''

உரையாடலை முடித்துக்கொண்டு அந்த யூதக் கிழவன் அந்த இடத்தை விட்டு வீடு நோக்கிச் செல்கிறான். நடுச் சாமத்துக்கு இன்னும் ஒரு மணித்தியாலமே இருக்கிறது. உக்கிரமான குளிர் உடலைத் துளைக்கும் போல் இருக்கிறது. பேய்க் காற்று வீசுகிறது. யூதன் தெரு மூலையை அடையும் போது, ஒரு கரிய உருவம் இருளில் இருந்தும் மிதக்கிறது, தெருவைக் கடக்கிறது; இவனை அணுகுகிறது; ஆனால் யூதன் கவனித்தால்தானே!

''இரண்டு மணித்தியாலங்களாய் உனக்காக காத்துக் கிடந்தேனே. இதுவரையும் எங்கே போய் இருந்தாய்" ஆவலுடன் கேட்டது அங்கே வந்த உருவம்.

''உம்மைத் தேடித்தானே நான் எமது முக்கிய இடத்துக்கு சென்றிருந்தேன்.''

''எப்படி இருக்கிறது விஷயம்''

''எல்லாம் பீத்தல்தான்''

இருவரும் சேர்ந்து உள்ளே செல்கின்றனர். இரகசியமாக ஏதோ குசு குசுத்தனர். பின்னர் அந்தக் கரிய உருவம் வேறு யாருமல்ல;மொங்ஸ்தான் Monks). உரத்த குரலில் பேசத் தொடங்கியது.

'உங்கள் திட்டம் பிழையாகத் தீட்டப்பட்ட திட்டம். மற்றப் பிள்ளைகளுடன் ஒலிவரையும் வைத்திருந்து பிற்பொக்கற் கள்ளனாக்கியிருந்தால் அவனை பொலிஸ்பிடித்திருந்தால்என் எண்ணம் பலித்திருக்கும்"

''அப்படிச் செய்வதால் எனக்கென்ன நன்மை. ஒலிவர் மற்றப் பையன்கள் போன்றவனல்ல. அவனை ஒரு பிற்பொக்கற் ஆக்க நாம் எடுத்த முதல் முயற்சியே அவலத்தில்தான் முடிந்தது. அந்தப் பெண் அவனைத் திருப்பப் பிடித்து வந்திருக்காவிட்டால் ஒலிவரை இழந்தது போலத்தான் இருந்திருக்கும். இப்போ அந்தப் பெண் அவனது நலத்துக்காக பாடுபடுகிறாள்.''

"அப்படியானால் அவனைக் கொல்ல வேண்டும்'' அமைதியின்றி அட்டகாசம் செய்கிறான் மொங்ஸ் (Monks.)

''அது செய்வது சிரமமான விஷயம். ஒலிவர் இன்று உயிருடன் இருப்பானுனுல் அவனை என்னுல் உங்கள் எண்ணப்படி ஒரு திருடனுக்க முடியும்"

''ஒலிவர் இறந்திருப்பானேயானுல் அதையிட்டு நான் எவ்வித பிழையையும் செய்யவில்லை.'' நடுங்கும் கைகளால் யூதனின் கைகளைப் பற்றியபடி பீதி நிரம்பிய பார்வையுடன் குறுக்கிடுகிறுன் மொங்ஸ் (Monks). உண்மையில் எனக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அவனை அவர்கள் சுட்டிருப்பார்களேயானுல் அதற்கு நானல்ல காரணம். நான் பேசுவது உங்களுக்கு கேட்கிறதுதானே. ஓ! அது என்ன ?''

''என்ன ? எங்கே ?'' தனது கைகளால் அந்த கோழையைப் பிடித்தபடி வினுவுகிறுன் யூதன். எதிரே இருக்கும் சுவரை பார்த்தபடி ''அங்கே அங்கே'' என்கிறுன் மற்றவன்.

''ஒரு நிழல்! போர்த்து மூடிய ஒரு பெண்ணின் நிழலைக் கண்டேன்''

இருவரும் அறையைவிட்டு அவதிஅவதியாகவெளியேறினர். மாடிப்படிகளைத் தவிர வேறு ஒன்றுமே அங்கு இருக்கவில்லை. அவதானமாக உற்றுக் கேட்டனர். ஆழ்ந்த அமைதியின் ஆட்சி அந்த வீட்டில் நிலவியது:

''இது ஏதோ 'உன்னுடைய மனப் பிராந்தியம் போலும்'' நண்பனைப் பார்த்து நகைத்தான் யூதன்.

''சத்தியமாக கூறுகிறேன் நான் கண்டேன். முதல் முறை கண்டபோது அது முன்னே வளைந்தது. நான் கதைக்கும் போது அது மறைந்தது. தனது நண்பனின் வெளிறிய முகத்தை வெறுப்புடன் பார்க்கிறுன் யூதன். விரும்பினுல் தன்னுடன் மேல் வீட்டுக்கு வரும்படி கேட்கிறுன். அறைகளைப் பார்க்கின்றனர். எல்லாம் குளிர்ந்தும் வெறிச்சோடியும் காட்சியளிக்கின்றன.

(தொடரும்)

## புதுக் குறள்கள்

தெரு வள்ளுவரினுல் பாடப்பட்டு
அனலை ரஞ்சினி – ராசனுல் பதியப்பட்டவை.

**அன்பு**

அன்பென்பது யாதெனில் அவர் தம்–கணவர்க்கு
பண்புடனே சாராயம் ஊற்றிக் கொடுத்தல்.

**கல்வி**

கல்விக் கறிகுறி காதலிப்பதே யல்லாவிடில்
பள்ளிக்குச் செல்வதில் பலனில்லை

பள்ளிக் கொழுங்காகச் செல்லுக–செல்லாக்கால்
எள்ளவும் கிடையா ஈ எறும்பு பணிசு.

**சீதனம்**

சீதனம் பெறுவோர் சிறந்தோர் எனப்படுவர்
காதணியும் – கடையில் ஈடு வையாவிடின்.



# கோடிமலர்கள் பூக்கட்டுமே



பூரணி

புதிதாக நட்ட மல்லிகைச் செடி துளிர் விட்டுவிட்டதில் கொள்ளை மகிழ்ச்சி சகுந்தலாவுக்கு. பச்சை அரும்புகளாய் முகிழ்ந்து நின்ற துளிர்கள் நலுங்க 'புஸ்' சென்று பொழிந்த பூவாளியின் நீர்ச்சரங்களைப் பார்த்ததும் குறுகுறுவென ஓடி வந்தாள் புஷ்பா.

"புஷ்பா! மெல்ல...மெல்ல... செடியை மிதிச்சிடாதேடா!" என்று கெஞ்சிய சகுந்தலாவின் குரலையும் சட்டை செய்யாமல் அருகில் வந்தவள், பூவாளியின் மழைச்சரங்களைக் கை நீட்டித் தொட்டுப்பார்த்தாள். பின் கைகளை நனைத்தாள்.

"ம்... ஊத்துங்க மாமீ! இன்னும் உத்துங்க..."

"அடடா! சட்டையெல்லாம் நனையிறதே புஷ்பா! வேண்டாம்!" என்றவாறு பூவாளியைக் கீழே வைத்துவிட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். நனைந்த பிஞ்சுக்கரங்களைத் தன் முந்தானையில் துடைத்துவிட்டபடி "சாப்பிட்டாச்சா?" என்று கேட்டாள். "பால் குடிச்சிட்டேனே" என்று தலையாட்டியபடி புஷ்பா துளிர்விட்டிருந்த மல்லிகைச் செடியைக் குறுகுறுவெனப் பார்த்தாள்.

"ஹையா? மொளைச்சிடுச்சி!" என்று தன் மகிழ்ச்சியை வெளியிட்டவள், "எப்போ மாமி பூக்கும்?" என்று கேள்வி தொடுத்தாள். வழக்கமாக கேட்கும் கேள்வி.

"எத்தனை பூ?"

"நெறையப் பூ"

"ஆயிரம் பூ?"

"ஓ! ஆயிரம் ஆயிரம் பூ பூக்கும்!"

"நெஜமாவா?" விரிந்த கருவிழிகள் நிச்சயப்படுத்திக்கொள்ளும் பாவனையில் சகுந்தலாவை நோக்கின. கை அருகில் கொத்துச் சரங்களைப் பூத்துச் சொரிந்த பிச்சிக் கொடியைச் சுட்டிக் காட்டின.

"அது மாதிரியாவா?"

"அதே மாதிரித்தான்"

"அப்போ சரி" திருப்தியற்ற மனதுடன் பிஞ்சுக் கைகளால் குழந்தை கழுத்தைக் கட்டி கன்னத்தில் முத்தமிட்டது.

"நல்ல மாமி!"

"நல்ல புஷ்பா!"

பதிலுக்குக் குழந்தையின் பூங்கன்னம் ஒரு முத்தப் பரிசு பெற்றது!

"என்னடி சனியனே! குடித்த பாலைக்கூட முழுவதும் குடிக்காமல்...... அப்படி என்ன அதிசயமானதைக் கண்டுவிட்டாய்?" – அடக்க முடியாத வெறுப்பின் குமுறல் சொற்களில் வெடிக்க, வேகமாக வந்தாள் சுசீலா.

"அம்மா! மல்லிப்பூமொளேச் சிருச்சி... மாமி வைச்சது......" குழந்தைக்கு அன்னையின் கோபம் புரியவில்லே. தன் மகிழ்வில் பங்கு கொள்ள அது தாயையும் அழைத்தது.

"ஆமா! பெரிய அதிசயத்தைக் கண்டுவிட்டாள்...... வாடி சனியனே! வந்துபாலேக்குடித்துத் தொலே!"

சுசீலாவின் கோபம் பழக்கப் பட்டதுதானே சகுந்தலாவுக்கு? அவள் அமைதியாகக் குழந்தையைக் கீழிறக்கி விட்டாள்.

"ஓடிப்போய் பாலேக் குடிச் சுடுடா கண்ணு...... நல்ல தங்கமில்லே......"

"நா குடிச்சிட்டு ஓடிவர்றேன்...... இங்கையே நில்லுங்க மாமி......... அப்பதான் நல்ல மாமி......"

"சரிதாண்டி! வா சீக்கிரம்... ஓடி வர்ருளாம் ஓடி! வாடைக் காத்துலே பச்சைத் தண்ணியிலே நனேஞ்சுகிட்டு ஆடி, வருத்தம் வந்து படுத்துக்கிட்டா கஷ்டப் படுறவ யாரு? ஊரிலே உள்ளவளுக்கா நஷ்டம்...... ?"

'ஊரிலே உள்ளவள்' என்ற வார்த்தை அம்புபோல் தைத்தது சகுந்தலாவின் நெஞ்சத்தில்.

அன்பு செய்வது பாவமா? கேள்விச்சுமை மேலும் அதிகரிக்க அவள் மற்றைய செடிகளுக்கு நீர் ஊற்றத் தொடங்கினுள். விரும்பிய மலர்ச் செடியை நட்டு, கவனித்து நீர் ஊற்றி, உரமிட்டு வளரச் செய்தால் அதுவும் வளர்ந்து நிறையப் பூத்துத் தன் நெஞ்சத்து நன்றியையும் அன்பையும் காட்டுகிறது. இது இயற்கை. இதற்காக யாராவது பொருமைப்படுவதுண்டா?

சுசிலாவைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா, கோபிப்பதா என்றே புரியவில்லே சகுந்தலாவுக்கு.

இனம்புரியாத தாழ்வு மனப் பான்மையில் சகுந்தலாவிடம் ஏற்பட்ட வெறுப்பு சினம் சுசிலாவுக்கு காரியமின்றியே அது காரணங்களேக் கற்பித்துக் கொண்டு செழித்து வளர்ந்தது. சகுந்தலா மணமும் மென்மையுமான மலர்ச் செடிகளே நட்டு வளர்த்தாள். சுசீலாவோ பயனற்ற முட் செடிகளேயும் கள்ளிகளேயும் நட்டுக் காத்து வளர்த்தாள்.

அழுக்காறு! அம்மாவோ! எவ்வளவு கொடியது!

தலேயில் பொன்னிற ரிப்பனும் அதில் சொருகிய சிவப்பு ரோஜாவும் மெல்ல அசைய, கை நிறையப் பிஸ்கட்டுகளுடன் தளிர் நடை பயின்று வந்தாள் புஷ்பா.

தன் தலே அலங்காரத்தையும், முக ஒப்பனேயையும் தாயிடம் காட்டிக் கேட்டாள்.

"அம்மா! நல்லாருக்கா?"

"அடடா! அழகு வழிகிறது போ! ஏன்டி அங்கே போய் இதெல்லாம் வாங்கித் தின்கிருய்? எத்தனே முறை சொல்கிறது அங்கே போகாதே போகாதேன்னு! சனியன் வாடி இங்கே"

"ஐய! மாமிதான் ரிப்பன் கட்டிப் பூவச்சுப்பொட்டும் வச்சு, பிஸ்கோத்து எல்லாம் தந்தாங்க.

மாமிதான் நல்லவ. நீ சரியில்லே. நான் உன்னோட 'கட்சி', போ! வரலே, மாமிகிட்டே போறேன்"

வாசலை நோக்கி ஓடிய குழந்தையைத் தரதரவென இழுத்து முதுகில் 'பளீ'ரென அடித்தாள் சுசீலா.

''சனியன்! சொன்ன பேச்சைக் கேட்பியா இனிமே...''

பக்கத்து வீட்டிலிருந்து எழும்பிய குழந்தையின் கதறல் சகுந்தலாவின் இதயத்தைப் பிளந்தது. அவள் நெஞ்சை அழுத்திப் பிடித்தபடி யன்னல் அருகில் வந்தாள்.

"ஏன் குழந்தையைப்போட்டு அடிக்கிறீங்க? அது என்ன தப்பு செய்தது?"

யன்னலிருந்து வந்த சகுந்தலாவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள் சுசீலா. அவள் கண்களில் வெறுப்பும், கோபமும் நிறைந்திருந்தது.

''என் பிள்ளையை நான் அடிப்பேன். கொல்லுவேன்...... அதைப்பற்றி ஒருத்திக்கும் அக்கறை வேண்டியதில்லையே!''

தொடர்ந்தும் சுசீலா கொட்டிய வார்த்தைகளைக் காதில் அள்ளிக் கொள்ள சகுந்தலா விரும்பவில்லை. என்றாலும் மாமீ! மாமீ! என்று அலறிய புஷ்பாவின் குரல்...

தலையணையில் புதைத்திருந்த சகுந்தலாவின் தலையை ஆதுரத்துடன் தூக்கினான் கோகுலன்.

''சகு! இதெல்லாம் என்ன சிறுபிள்ளைத்தனம்...? அவர்கள் புத்தி அவ்வளவுதான் என்று விட்டுவிடாமல்..."

"இல்லைங்க... பச்சைக் குழந்தை... அந்தப் பூவுடலிலே பட்ட அடி என் இதயத்திலே விழுந்ததுங்க... அவங்க ஏசினுங்கன்னு நான்வருத்தப்படலெ...''

"சரியான பைத்தியம்!'' கோகுலன் சிரித்தான்.

''உரிமையில்லாத ஒருபொருளுக்காக நீ படுகிற வேதனை பெருமை இல்லாதது சகு......"

''உரிமை...... ஒரு குழந்தை மேல் அன்பு வைக்கக்கூட உரிமை தேவையா ?''

''நிச்சயமா! இதோ பார் சகு! இன்னும் ஒரு வாரத்திலே புஷ்பாவின் அப்பா — நடராசன் இங்கிருந்து மாறிப் போகிருர். அப்போது? புஷ்பாவை உன்னிடமே விட்டுப் போகும்படி நீ கேட்க முடியுமா ? இல்லை அவர்கள்தான் கொடுப்பார்களா ?"

''என்னங்க ? அவங்களுக்கு மாற்றமா ? அப்படீன்னு புஷ்பாவும் போயிடுவாளே......"

சகுந்தலாவின் நெஞ்சில் ஏக்கம் சூழ்ந்தது. கோகுலனுக்கு அவளைச் சமாதானப்படுத்த வழி தெரியவில்லை. காலம்தான் அதை மாற்ற வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆனால் அந்தக் காலமோ ?

எத்தனை மாற்றங்களை ஏற்படுத்திவிட்டது ?

''சகு! இப்படியே ஏங்கிக் கொண்டிருந்தால் எப்படி? பெற்றவர்கள் கூட ஒருவாறு தேறி இருப்பார்கள் இந்நேரம் நீ என்னடாஎன்றால்........."

"எப்படிங்க முடியும்? ஐயோ! தள்ளாடித் தள்ளாடி அவ நடக்கிற நடையும், மூச்சு விடாமல் கேள்வி கேட்கிற அழகும்......" சகுவின் விழிகள் பொழியும் மழை முகிலானது.

"அம்மா எவ்வளவு தடுத்தாலும், அதை மீறி என்கிட்டே அவ வைத்திருந்த அன்பு........ எப்படிங்க நான் மறப்பேன்?"

"மறக்க வேண்டாம் சகு! மனதைத் திடப்படுத்திக் கொள்ளு. விதியை மாற்ற யாரால் முடியும்? எவ்வளவு அழுதாலும் புஷ்பா மீண்டும் உயிர்த்து விடுவாளா?"

"ஐயோ! அவ செத்துப் போனுள் என்கிறதையே என்னல் நம்ப முடியவியே........"

"சகு! வந்துபார்! உன் மல்லிகைச் செடியெல்லாம் வாடிப் போய்க் கிடக்கிறது..."

"போகட்டும்! பேசும் பூவாய், வாசச் சரமாய் இருந்த புஷ்பாவே போய்விட்டாள்...... இது போனல் என்ன?"

கோகுலனுக்கு மீண்டும் தோல்வி. அவன் மனம் சலித்துக் கொண்டது.

"இவள் மனதைத் தேற்றவே முடியாதா?"

"என்னம்மா? என்ன செய்கிறது...? அடடா..." மாமி வந்து தலையைத் தாக்கிப்பிடித்தபடி அங்கலாய்த்தாள்.

"ஒன்றுமில்லை மாமி... வயிற்றைக் குமட்டுகிறது... பித்தமோ என்னவோ!"

கூறிமுடிப்பதற்குள் மீண்டும் மீண்டும் ஓங்காளம் முகம் கழுவத் தண்ணீர் தந்து முகத்தைத் துடைத்துக் கைத்தாங்கலாக உள்ளே கூட்டிச்சென்று படுக்கையில் விட்டாள் மாமி. கோகுலன் பதறியபடி ஓடிவந்தான்.

"அம்மா? சகுவுக்கு என்ன? ஏன்...?"

"கவலைப்பட வேண்டாம் அப்பா! சந்தோசமான சமாச்சாரம்தான்... நான் பாட்டியாகி விட்டேன்...!"

"அம்...அம்மா!" வெட்கத்துடனும், மகிழ்ச்சித் துள்ளலுடனும் சகுந்தலாவைப் பார்க்க ஓடினன் கோகுலன்.

புஸ்...ஸென்று சிரித்தது பூவாளி. தளதளவென வளர்ந்து நின்ற மல்லிகைச் செடியின் தளிர்கள் குளிர் நீரின் தழுவலில் மெய்மறந்து நலுங்கிக் குளித்துக் கொண்டிருக்கின்றன. இமைக்க மறந்து அதையே பார்க்கிருள் சகுந்தலா. மனதுள் இனம் புரியா ஏக்கம் கலந்த பூரிப்பு. இருதய வெளியில் ஒரு குரல் எதிரொலிக்கிறது.

---

மனைவியிடம் எப்பொழுதும் விகடமாகப் பேசும் கணவன் சாப்பிடும்பொழுது மனைவியைப் பார்த்து :

இந்தச் சாதம் (சோறு) இன்னும் கொஞ்ச நேரம் அடுப்பில் இருந்திருந்தால்......

**மனைவி :** சாதம் கரைந்திருக்கும் அப்படித்தானே!

**கணவன் :** அப்படியில்லை இதற்குள்ளிருக்கும் கற்களும் கரைந்திருக்கும்.

**மனைவி :** ? ? ?? ? ?

"எப்போ மாமி பூக்கும்?"

சகுவின் மனம் முணுமுணுக்கிறது.

"இன்னும் கொஞ்சநாளிலே பூத்திடும்"

"எத்தனை பூ!"

"நிறையப் பூ!"

"ஆயிரம் பூ?"

குரல்வரும்திசை தெரிகிறது. சகுவின் கைகள் வயிற்றைத் தடவிக் கொள்ளுகின்றன. இதழ்கள் அசைகின்றன.

"ஆயிரம் மட்டுமா ? கோடி கோடிப் பூக்கள் பூக்குமடி கண்ணே!" கண்ணில் நிறைந்த நீரும், மனதில் தேங்கும் நினைவுகளும் மட்டுமல்லாது எண்ணத்தில் புதிதாகப் பூக்கத் தொடங்கிய புதிய கனவுகளுடன் அவள் செடிகளுக்குக் குளிரக் குளிர நீர் வார்க்கின்றாள்.

அன்பெனும் வித்து முளைத்து விட்டது. அது வளர்ந்து பூக்காமல் போய்விடுமா என்ன ? நிச்சயமாகப்பூக்கத்தான்போகிறது! ஆயிரம் ஆயிரமாய், கோடிகோடியாய்ப் பூத்துச் சிரிக்கட்டுமே !

★

★ குட்டிக் கதை

# பூனையும் முட்டையும்

ஒரு பூனை இருந்தது. மிக அழகான கலகலப்பான பூனை. இந்தப் பூனை ஒரு நாள் ஒரு முட்டையைச் சந்தித்தது. கண்டதுமே பூனைக்கு முட்டையிற் பிடித்துக் கொண்டது. முட்டையின் அடக்கமான உருவமும் அமரிக்கையானசுபாவமும்அந்தப் பூனை மனத்தை ஒரேயடியாகக் கவர்ந்து விட்டன. இருவரும் இணைபிரியாத நண்பர்களாயினர். எப்போதும் ஒன்றாக உண்பதும் உறங்குவதும் விளையாடுவதும் அவர்களது வழக்கமாயிற்று. இந்த உலகத்து இன்பங்களை எல்லாம் தன்னோடு சேர்ந்து தனது நண்பனும் அனுபவிப்பதை நினைத்து நினைத்துப் பூனை பெருமகிழ்ச்சி எய்தியது.

'நல்ல காரியங்கள் இந்த உலகத்தில் நீடித்திருப்பதில்லை.'

ஒரு நாள் இந்தப் பூனையும் முட்டையும் பரணின் மீது விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது தற்செயலாக பூனையின் கை சற்று பலமாக முட்டையின் மீது பட்டுவிடவே என்ன நடந்தது என்று யாரும் உணர்வதற்குள் முட்டை உருண்டு கீழே விழுந்து 'டிச்' என்ற சப்தத்தோடு உடைந்தது. பரணிலிருந்து பூனை குனிந்து நோக்கியது. முட்டையும் நோக்கியது. முட்டை தனது அகன்ற ஒற்றை மஞ்சட் கண்ணால் தன்னைக் குற்றம் சாட்டுவது பூனைக்குத் தெரிந்தது. பூனையின் அன்பு நிறைந்த இதயத்தால் இந்த எண்ணத்தை தாங்க முடியவில்லை. அது அந்த இடத்தை விட்டு ஓடிப்போயிற்று.

"பூனைகள் முட்டைகளோடு சேரக்கூடாது"

— செ. வே. கா.

# யுக்திப் புதிர்

சென்ற மாத 'யுக்திப் புதிர்' ஏராளமான வாசகர்களைக் கவர்ந்திருக்கின்றது. 276 விடைகள் கிட்டின. அதில் சரியான விடை எழுதிய அதிர்ஷ்டசாலியான பரிசுபெற்ற நேயருக்குப் பரிசுகள் அனுப்பப்பட்டுள்ளன. அவர்—

மு. லீலானந்தன்
கந்தரோடை,
சுன்னுகம்.

சரியான விடை : அர்ச்சகர்பறித்த பூக்கள் —7; கோவில்களில் சாத்திய பூக்கள் —8; இந்த விகிதப்படிவரும் பிற எண்களும் சரியானவையாகும்.

சென்ற மாதம் சரியான விடை எழுதியோர்:

அந்தோனிதாசன் 141, மலாய்வீதி, கொழும்பு; ஐ. வரவேஸ்வரன் 292, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்; ம. யு. புவிராஜா, ஸ்ரபோட் கல்லூரி, கொழும்பு; த. செல்லத்துரை, கொழும்புத்துறை; வெ. சபாநாதன் கரவெட்டி; வி. அலெக்சாண்டர், 67, வேம்படிவீதி யாழ்ப்பாணம்; செல்வி. எம். மேரீ காமல் ரதீனி, 'ஜயவாசம்' நாக்கியம்புலம், சுன்னுகம்; எஸ். அலோசியஸ் பேசாலை; செல்வி நிர்மலா யோசேப், 47, பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம்; செல்வி இ. மங்களேஸ்வரி, சண்டிருப்பாய் தெற்கு; சீ. லலிதா 173 நாவலர்வீதி வண்ணுர்பண்ணை; அஸீஸ். ஏ. சமத், 45, ஸீனத் பலாநதை, அகலவத்தை; இ. ஜெயராசா, சூராவத்தை, சுன்னுகம் அ. கிறிஸ்ரி, மவுண்ட் காமல்வீதி, யாழ்ப்பாணம்; இ கிறிஸ்டியன் கிளென்னி எஸ்பீரியர் குருநகர், யாழ்ப்பாணம்; செல்வி. ஆர். இன்னுசிமுத்து, மேற்கு மாதகல்; திருமதி. ந க. ஆசைப்பிள்ளை, நமலவாசா, சூராவத்தை, சுன்னுகம்; சி. சீவரூபன், முள்ளா வத்தை, அல்வாய்; ஆ. மகாதேவன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை வே. மனோகரன், ஏழாலை தெற்கு, சுன்னுகம்; அ. கனகசூரியர், ஊரெழு மேற்கு; செல்வி. எஸ் சிமாம்பிள்ளை, அம்மன் வீதி பண்டத்தரிப்பு; செ சிறீதரன், நல்லூர், யாழ்ப்பாணம்; செல்வி க. லிங்ககுமாரி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்; ம. சிறீகரன், கொழும்புத்துறை; செ. செல்வக்குமார், கடற்கரைவீதி, பருத்தித் துறை; ஏச். எம். ஹலீம், 37, மெயின் வீதி, கல்பிட்டி; ச. விநாயக ரத்தினம், கைலண்ட்ஸ் கல்லூரி, அட்டன்; இரா. தருமலிங்கம் நெடுந்தீவு; வி. மகாலிங்கம், நீராவியடி, யாழ்ப்பாணம்; சூ. ம. செபஸ்ரியன் பறங்கித் தெரு, மன்னுர்: வைலட் மரியநாயகம், பிரதானவீதி மாதகல்.

இம்மாதப் புதிர் :

குறும்புக் கண்ணனிடம் உன் பாட்டனார் என்ன வயதில் இறந்தார் என்று கேட்க, அவன் "என் பாட்டனார் தனது ($\frac{1}{4}$) கால் பங்கு வயதை மாணவனாகவும்; ($\frac{1}{5}$) ஐந்தில் ஒரு பங்கை கந்தோரில் உதவியாளராகவும், ($\frac{1}{3}$) மூன்றில் ஒரு பங்கை கந்தோரின் தலைவராகவும், பின் 13 வருடங்கள் பென்சன் காரராகவும் கழித்தார். அப்படியானால் அவர் என்ன வயதில் இறந்தார் என்பதை நீங்களே கணக்குப் போட்டுப் பாருங்கள்" என்றான்.

விடையை ஒரு தபால் அட்டையில் எழுதி கீழேயுள்ள முகவரியை கத்தரித்து ஒட்டி அனுப்பவும்.

யுக்திப்புதிர்—4
விவேகி
29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.


உங்கள் அச்சுவேலைகள்

★ தமிழ்
★ සිංහලම්
★ ENGLISH
★ संस्कृतम्

எந்தமொழியில் செய்யப்பட வேண்டும்?

ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது

61, பெரியகடை ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்தில் விசாரியுங்கள்

# கந்தர் அம்மான் - செல்லாச்சி

கந்தர் அம்மானுக்கும், செல்லாச்சிக்கும் அரசியலைப் பற்றி விவாதம் நடந்தது. முடிவில் கந்தரம்மான் 'உதைவிடு!' என்றார். அடுத்தகணம் பயங்கரமான உதை அவர் வயிற்றில் விழ, எட்டத்தில் போய் விழுந்தார்.

★

கந் : எனக்கு சுவீப் விழுந்தால் தமிழ்ப்படம் எடுப்பன்.

செல் : அப்ப நான்தான் கதாநாயகி.

கந் : ? ? ? ? ? ? ?

பருத்தித்துறை — த. செல்வம்

---

கந் : எடியே! நம்முடைய கந்தப்போடிக்கு கடிதம் எழுத வேணும். விலாசம் தானே தெரியல்ல......

செல் : இதுக்கென்ன யோசனை...? அவனிட்ட ஒரு கடிதத்தை எழுதி அவன்ர விலாசத்தைக் கேளுங்கோவன்.


மட்டக்களப்பு — ந. நல்லரத்தினம்

---

செல் : எங்கட மூத்தவன் காத்திகேயன் அல்லோ கண்ணுக்கு போடுறதுக்கு ஒரு கறுத்தக் கண்ணாடி வேணுமாம் வெயிலுக்கு கண் கூசுதாம்.

கந் : அடி விசரி...... உனக்கு விசயம் விளங்காது. கறுத்தக் கண்ணாடி போட்டா பெட்டையளை நேருக்கு நேர் நிண்டு பாக்கலாம் அதுக்குத்தான் இது.

யாழ்ப்பாணம் — வே. செல்லத்துரை



கந் : செல்லாச்சி... பாத்தியே முன் வீட்டுக்காரன்ர நடப்பை. தன்ர தம்பியின்ர கல்யாணத்துக்கு எனக்கவன் காட் அனுப்பல்லே.

செல் : அவனை விடு-சட்டை தொப்பிக்காரன். ஆனா... அந்த ஆலடிக் கந்தன் போன வருஷம் எங்கட மேன்ர கல்யாணத்துக்கு ஐஞ்சுரூபா தந்தவன். அதை வேண்டுறதுக்கு மேளின்ர சடங்குக்கு காட் அனுப்பிப் போட்டான் ஆறு ரூபா தண்டம்.

சித்தங்கேணி — கே. வி பாலசந்திரன்

---

செல் : கதிர்காமம் போனியளே!... என்ன புதினம்?

கந் : சோப் மணக்குது. பேஸ்ட் மணக்குது. மாணிக்க கங்கையிலே. கோயிலைச் சுற்றி பைலா ஆட்டம் தினமும் நடக்குது.

— தேனுடன்

# நங்கிக் கடல்

## 'செங்கை ஆழியான்'

''விரும்புகிறேன், சுவாமி! விரும்புகிறேன்! உதயவல்லியுங்கள் காதலி என்பதை நான் அறிய நேரிட்டபோது எவ்வளவு தூரம் மனங் கலங்கினேன் தெரியுமா? நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டதாகக் கூட எண்ணிக் கொண்டேன்!... உங்களை மறந்து விட வேண்டும் எனப் பல முறைகள் முயன்றும் என்னால் அது முடியவில்லையே?...''

''மாதேவி! எந்த ஒரு பெண்ணும் தன் கணவனின் அன்பு பிரிக்கப்படுவதை விரும்ப மாட்டாள்...!''

''உண்மைதான்! நான் தமிழ்ப் பெண்! தன் மனதிலே கணவராக முதலில் வரித்தவரை விட வேறொருவரை மனதாலும் எப் பெண்ணும் எண்ணுவாளா? உங்களை என்றோ என் துணைவராக நான் வரித்து விட்டேன்! வாழ்வோ தாழ்வோ அது உங்களுடனேயே எனத் தீர்மானமாக முடிவு செய்துவிட்டபின் உங்கள் அன்பு பிரிக்கப்படுவதை என்னால் தடுக்க முடியுமா?''

சங்கிலிகுமாரனால் எதுவுமே பேச முடியாதவாறு அரசமாதேவியின் வார்த்தைகள் செய்ததோடு அவனைச் சிந்திக்கவும் வைத்தன;

''மாதேவி! நீ என்னிடம் எதைத்தான் விரும்புகிறாய்''

''உங்கள் அன்பிலே ஒரு பங்கை எனக்குத் தாருங்கள் எனக் கேட்கிறேன்! உதயவல்லியும் என்னைப் போலப் பெண்! அவளை ஏமாற்றி விடாதீர்கள்! அவளை நீங்கள் மணந்து கொள்வதில் எனக்கு மகிழ்ச்சியே!... அத்தோடு உங்கள் இதயத்தில் மனைவியென்ற ஸ்தானத்தை எனக்குத் தாருங்கள்!''

''உங்கள் இருவரையும் மணந்து கொள்ளும்படி கேட்கிறாயா?''

''கேட்கவில்லை, பிரபு! யாசிக்கிறேன்!''

பரநிருபசிங்கர் கூறியது நினைவு வந்தது. 'உதயவல்லியை மணந்துகொள், ஆனால், பட்டத்துராணியாக அவளிருக்க முடியாது! அரசமாதேவியையும் மணந்து, பட்டத்துராணியாக்கிக்கொள்!'

முடியை வேண்டாமென்று கூறினாலும் சிலவேளை தந்தையும் தமையனும் ஒப்புக் கொள்ளார்கள்! உதயவல்லியையும் என்னால்

இழக்கமுடியாது? இதைத் தீர்க்கவழி தமையன் கூறிய வழிதானா? அதைத்தானே அரசமாதேவியும் யாசிக்கிறாள்? ஆனால், அதற்கு உதயவல்லி உடன்படுவாளா? பட்டத்துராணியாக்குவேன் என அவளுக்கு வாக்களித்திருந்தேனே? அதனால் என்ன? ஒப்புக்கொண் டேயாக வேண்டும்! அவள் மறுக்காது ஒப்புக் கொள்ளுவாள்! 'அவள் காதலிப்பது என்னை, அரசியென்ற பதவியையல்ல!' எனச் சங்கிலி குமாரன் எண்ணினான்.

எண்ணம் தந்த முடிவுடன் பேசுவான்:

''போய் வா, மாதேவி! உன் கனவு நிறைவேறும்!'' எனக் கூறிய போது, அவள் அவன் கைகளைக் கண்களில் ஒத்திக்கொண்டதோடு, அவனது பாதங்களைத் தொட்டு வணங்கக் குனிந்தாள்; அவளைத் தடுத்து 'வேண்டாம், மாதேவி!'' என்றவனை நிமிர்ந்து பார்த்த மாதேவியின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"ஏன் திரும்பவும் அழுகிறாய்?''

"அழவில்லை, பிரபு! இது ஆனந்தக் கண்ணீர்!"

சங்கிலிகுமாரனை அறியாமலேயே அவனது வலது கை அவளது கண்ணீரைத் துடைத்தது.

மஞ்சத்தைவிட்டு எழுந்த சங்கிலிகுமாரனின் முகத்தில் சிக்கலுக்குத் தீர்வு கண்டதினால் ஏற்படும் அமைதி நிலவியது; தன்னுடைகளைக் களைந்து விட்டு வேறுடைகளை அணிந்து கொண்டு கீழே இறங்கி வந்தான்; அரைத் தூக்கத்திலிருந்த காவலர் எழுந்து வணங்கி வழி விட்டனர்.

சிறிது நேரத்தின்பின், அரண்மனை வாயிலைக் கடந்து மருத்துமா மலை வனமிருந்த திக்கை நோக்கி ஓர் உயர்ந்த சாதிப் புரவியொன்று நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்து சென்றது.

18



## சபதம் செய்தாள், உதயவல்லி

**கா**ற்றினால் அலைப்புண்ட தென்னங் கீற்றுகளின் சரசரத்த ஒலியோடும், மருந்துச் செடிகளின்மேல் ''இஸ்'' சென்ற இரைச்சலோடு ஒளி வீசிப் பறக்கும் மின்மின்களின் ஒலியோடும், பாரிய மரங்களின் கிளைகளில் ஒட்டிக் கொண்டு கிடக்கும் சில்வண்டின் மூச்சுவிடா ஒலியோடும், தூக்கக்கலைப்பினால் துயில் கலைந்து சிறகடிக்கும் புட்களின் ஒலியோடும் போட்டிபோடுவதுபோல் உதயவல்லியின் விம்மல் ஒலி எழுந்தபோதிலும், அது மற்றைய ஒலிகளிலும் வலிமை வாய்ந்ததாக விருந்ததால், மருத்துமாமலை வனத்தின் நிசப்தத்தைக் குலைக்கத் தவ

றவில்லை அந்த இரவின் நிலவொளியில் தேவகன்னிகையென உதய வல்லி அமர்ந்திருந்து அழுவதைக் கண்டோர், 'இவள் என்ன மோகி னியோ?' எனத் திகைக்கவே செய்வர்; உதயவல்லியை வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த சங்கிலிகுமாரனுக்கு, 'தவிர்க்க முடியாத சோகத்தின் சாயல் அவள் முகத்தில் படிந்தும் கூட அவ ளது மோகன அழகு கூடியுள்ளதே' என்ற எண்ணம் எழுந்தது.

அவளின் அழுகுரலைச் சகிக்க முடியாத சங்கிலி, ''உதயா, ஏன் அழுகிறாய்?'' எனத் துன்பத்தோடு வினவினான்.

''அழுவதற்கென்றே நான் பிறந்துவிட்டேன்! இனி அழுதழுது மாள்வதைவிட வேறு என்ன இருக்கிறது?" என்று கூறிவிட்டு விம்மி விம்மி அழும் உதயவல்லியைத் தன் கைகளினால் தூக்க முயன்ற போது, பெண் புலியென அவள் சீறினாள்:

''என்னைத் தொடாதீர்கள்!...

''உதயவல்லி...!''

''அப்படி அழைக்கக்கூட உங்களால் முடிகிறதே? என்னை ஏமாற்றி விடுவதற்காகவா இவ்வளவு காலமும் என்னோடு காதல் நாடகம் ஆடினீர்கள்...? என்னை ஏமாற்றிவிட்டீர்களே? என்னுடைய கனவுகளைச் சிதைத்துவிட்டீர்களே? உங்களோடு எப்படி எப்படியெல்லாம் வாழ்வு நடத்துவேன்' என்று நான் நாளாந்தம் கட்டிய மனக்கோட்டைகளை யெல்லாம் கணப்பொழுதில் துகளாக்கிவிட்டீர்களே?... என்னிதயத் தில் என் காதல் தெய்வத்திற்காக நான் கட்டிய கோயிலில் இன்று மண்ணும் தூசும் மிஞ்சச்செய்துவிட்டீர்களே? என்னை இவ்வாறு ஏமாற் றுவீர்களென நான் கனவிலும் எண்ணவில்லை...!''

பொங்கிவழியும் எரிமலையெனக் குமுறும் அவளைச் சாந்தப்படுத்த முடியாது தவிப்பதைத் தவிர அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. 'அரசமாதேவியோடு, அவளையும் மணக்கும்படி தமையன் கூறி யதைக்கூறிச், சம்மதம் பெற ஓடோடி வந்த சங்கிலிகுமாரன், இவ்வி தமாக உதயவல்லி பொங்குவாள் என எதிர்பார்க்கவில்லையாதலால், திகைத்து நின்றான்;

அவன் அப்படி ஒன்றும் அதிகமாகவும் கூறிவிடவில்லை;

''உன்னை நான் மணந்துகொள்வதில் ஒருவருக்கும் ஆட்சேபமில்லை உதயவல்லி! ஆனால், அரசமாதேவியைப் பட்டத்துராணியாக ஏற்க வேண்டுமாம்!" என இவ்வளவே கூறினான். அதற்கு இவ்வளவு சீற்ற மேன்?

''உதயா! நான் கூறுவதைக்கேள்...?"

''கேட்பதற்கென்னவிருக்கிறது! நீங்கள் கூறியவற்றைக் கேட்டுக் கேட்டுத்தானே நான் இந்த நிலைக்கு வந்தேன்!.. பட்டத்துராணி நீயே எனச் சத்தியம் செய்தீர்கள்! இன்று அச்சத்தியமெங்கே? காற்றிலே துகளெனப் பறக்கவிட்டுவிட்டு வந்து நிற்கிறீர்கள்! உங் களுக்கு இதயமேயில்லையா? இனிய இரவுகளில் இன்பக் கதைகள் பேசியதையெல்லாம் மறந்துவிட்டீர்களா?... எத்தனை வாக்குகள் தந்

தீர்கள்? பேசிப்பேசி என்னைப் பித்துக்கொள்ள வைத்துவிட்டு இன்றென்னை ஏமாற்றிவிட்டீர்களே? 'நான் பிறந்ததே உனக்காகத்தான்' என்கிறீர்கள்? இன்று யாருக்காகவோ பிறந்திருக்கிறீர்கள்! உங்கள் மனதில் நிலையான கொள்கையே இல்லையா? மனம்போனபடி எல்லாம் மாறி என்போன்ற அபலைகளை ஏய்ப்பதுதான் உங்கள் தொழிலா?..."

"உன்னை நான் ஏமாற்றவில்லை......!"

"பின் நீங்கள் எனக்குச் செய்த துரோகத்திற்கு வேறு என்ன பெயர்?"

"உதயா! ஆத்திரமடையாமல் நான் சொல்வதைக்கேள்! இன்றைய சூழ்நிலையில் என்னைச் சூழ்ந்தோர் உன்னை மணக்க அனுமதித்ததே பெரிது."

"நீங்கள் கூறுவது விளங்குகிறது! உன்னை மணந்து கொள்கிறேன்! பட்டத்து ராணி என்ற உரிமையை அரசமாதேவிக்கு அளி என்கிறீர்கள்...... அப்படித்தானே?" என்று உதயவல்லியின் விம்மல் ஒலி படிப்படியாக அடங்கிவிட ஏமாற்றப்பட்டுவிட்டோமென்ற எண்ணந் தந்த வெறியோடு பேசினாள். சங்கிலிகுமாரன் ஆமெனத் தலையாட்டியது மிகவும் பரிதாபமாகவிருந்தது.

"என்னை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. என்னைப் பட்டத்து ராணியாக்கிவிட்டு, அரசமாதேவியை மணந்து கொள்வதென்றுற் கூட நான் விரும்பமாட்டேன்! — இளவரசே! பெண்களின் மனதை நீங்கள் அறியீர்கள்! எந்த ஒரு பெண்ணும் தன் மணாளனின் அன்பு தனக்கு மட்டுமே சொந்தமாகவிருக்கவேண்டுமென்றே விரும்புவாள்......"

அரசமாதேவியிடம் எதை அவன் கூறினானோ அதையே இவளும் கூறினாள்; ஆனால், அரசமாதேவியும் பெண்தானே?

"உதயவல்லி! நீ எதைத்தான் விரும்புகிறாய்?"

"நான் விரும்புவது இதுதான்! — நீங்கள் எனக்கு மட்டுமே சொந்தமாகவிருக்க வேண்டும்! உங்களன்பு எனக்காக மட்டுமே இருக்க வேண்டும்! உங்கள் பட்டத்துராணியாக நானிருக்க வேண்டும்......!"

"நீ என் மனைவியாகவிருக்கலாம்! என்னன்பு உனக்காக மட்டுமிருக்கலாம்! ஆனால் நீ பட்டத்துராணியாக ஆகமுடியாது. உதயா! சிந்தித்துப் பார்......"

உதயவல்லி கலகலவெனச் சிரித்தாள்; சற்றுமுன் அழுதவளா இப்போது சிரிக்கிறாள் என எண்ணிய சங்கிலி, "ஏன் சிரிக்கிறாய்?" எனக் கேட்டான்.

"உங்கள் நிலை கண்டு சிரிக்கத்தான், என்னால் முடிகிறது! இரு பெண்களை ஏமாற்றக் கனவு காணுகிறீர்கள்!... நீங்கள் ஒரு துரோகி!" எனக் கத்தினாள்.

"உதயா......!"

"நீங்கள் ஒரு மோசக்காரர்!..."

''உதயவல்லி!"

''நீங்கள் ஏமாற்றுக்காரர்! என்னை ஏமாற்றிவிடலாமெனக் கனவு காணுகிறீர்கள்!''

படிப்படியாக உதயவல்லியின் பேச்சில் ஆவேசவுணர்வு தலை காட்டுவதையும், அவளது கனவுகள் அழிந்து போனதால் அறிவை இழந்து, வெறி கொண்டவள் போல மாறுவதையும் சங்கிலி கண்டான்.

''உதயா! நீ என்னைக் காதலிக்கிறாயா? அல்லது, பட்டத்துராணி என்ற பதவியைக் காதலிக்கிறாயா ?......'' என்ற அவனின் கேள்வி சற்றுத் திடுக்கிட வைக்கவே, சிறிது தயங்கிவிட்டு வீரிட்டாள், உதயவல்லி.

''இரண்டையுமே காதலித்தேன்!......''

''உதயா! உன்னை நான் என்னுயிரினும் மேலாக நேசிக்கிறேன்! அரசி என்ற பதவியை உனக்கு என்னால் அளிக்க முடியாவிடினும், என்னிதயசிம்மாசனத்தில் தனி அரசியாக நீ இருப்பாய்!......"

''கேவலம்...... ஒரு வைப்பாட்டி என்ற இழிநிலையில் உங்களுக்கிருப்பேன் என எண்ணுகிறீர்களா ?"

'வைப்பாட்டி' என்ற அச் சொல் சங்கிலிகுமாரனைச் சித்திரவதை செய்ததோடு, சிந்திக்கவும் வைக்கவே, ''உதயா! அப்படியல்ல ஊரறிய உன்னை என் இரண்டாவது மனைவியாக மணப்பேன்!'' என்றான்.

''பல மலர்களை நுகரும் வர்க்கந்தானே நீங்கள். உங்கள் தந்தை மூன்று மனைவிகளையுடையவர். நீங்கள்... உங்களுக்கு இப்படிக் கூற வெட்கமாகவில்லை.........'' உதயவல்லி கூறி முடிக்காது திரும்பவும் விம்மினாள். கண்கள் இரண்டும் இரத்தச் சிவப்பாகி விட்டன. சங்கிலி குமாரன் பேசுவான் :

"வெட்கப்பட என்னவிருக்கிறது-நாட்டிற்காக எதையும் தியாகம் செய்ய நான் தயாரானபின்......''

''என்னைக்கூடவா...... ?''

''அந்நிலை ஏற்பட்டால்......''

''அந்நிலை ஏற்படுமென எண்ணியுள்ளீர்கள்! உங்கள் மனம் மாறி விட்டது! அரசமாதேவியின் அழகிலே மதியிழந்து விட்டீர்கள்......"

''உதயவல்லி!''

"என் பெயரை உங்கள் அழுக்குப் படிந்த வாயினால் உச்சரிப்பதை நான் வெறுக்கிறேன்! இங்கிருந்து போய்விடுங்கள்! உங்கள் வாழ்வில் உதயவல்லியென்பவள் குறுக்கிட்டாள் என்பதையும் மறந்துவிடுங்கள்''

சங்கிலிகுமாரனின் தன்மானம் விழிப்படையத்தொடங்கியது: 'அழுக்குப்படிந்த வாயினால் தன் பெயரை உச்சரிக்கவேண்டாமாமே?'

''உதயவல்லி! நான் இங்கிருந்து போவது உனக்கு விருப்பம் என்றால் போகிறேன்! ஆனால், போகுமுன் ஒன்று..."

"ஒன்றும் வேண்டாம்! போய்விடுங்கள்..."

''கடைசித் தடைவையாக, உன் மீது நான் வைத்த அன்பின் நிமித்தம் கேட்கிறேன்! வீண் பிடிவாதத்தை விட்டுவிட்டுச் சிந்தித்து முடிவு செய்!...''

''சிந்தித்து முடிவானபின் வீண் பேச்செதற்கு? என்னை ஏமாற்றிய தில் நீங்கள் மகிழலாம்! ஆனுல், அப்பாவம் உங்களை விடாது...!"

''சபிக்கிருயா, உதயவல்லி?"

''உங்களைச் சபிக்க நான், யார்? உலகமே உங்களைச் சபிக்கப் போகிறது! உங்களுக்காக அவள் காத்திருப்பாள் போய்விடுங்கள்!''

''எவள்?'' எனத் திரும்பினுன், சங்கிலி

''அரசமாதேவி!... என் வாழ்வில் குறுக்கிட்ட கருநாகம்!"

''அவளையேன் திட்டுகிருய்?..."

''ஆமாம், அவளையேன் நான் திட்டவேண்டும்! என்னை ஆசை காட்டி ஏமாற்றிய உங்களையல்லவா திட்டவேண்டும்?" உதயவல்லி அங்கிருந்த ஓதியமரத்தோடு சாய்ந்துகொண்டு ஆகாயத்தைப் பார்த் தாள்; கருமேகங்கள் எங்கிருந்து சூழ்ந்தன?

''உங்களைத் திட்டி என்ன பயன்? நீங்கள் உங்கள் பிறவிக் குணத் தைக் காட்டிவிட்டீர்கள்! ''என்ருள், அமைதியாக

''எது என் பிறவிக் குணம்?'' எனக் கோபத்தோடு கேட்டான்.

அறிவை அடியோடு இழந்து விட்டதாலும், இதயத்தில் பிரளயமே உருவாகிவிட்டதாலும், எதைச் சங்கிலி தனது பலவீனமென்று எண் ணிக்கொண்டிருந்தானே அதையே தயங்காது கூறினுள், உதயவல்லி.

''கேவலம், ஒரு வைப்பாட்டியின் மகன், வேறு எப்படியிருப்பான்?"

சுய அறிவை இவ்வொரு வார்த்தையினுல் இழந்துவிட்ட அவன், தனக்கும் அவளுக்கும் இருந்த பந்தம் அடியோடு அறுந்து விட்ட தாகவும், பயங்கரமான எதிரி ஒருவன் எதிரில் நிற்பதாகவும் எண்ணிக் கொண்டதால் மிருகமானுன்; 'பளீர், பளீர்' என அவள் மாம்பழக் கன்னங்கள் சிவந்தன.

வெறி கொண்டவன் போலான சங்கிலி அவள் தோள்களைப் பயங் கரமாக உலுக்கியபடி, ''அடிபாவி! உன் மீது இருந்த என்னன்பை யெல்லாம் ஒரு வார்த்தையினுல் பொசுக்கிவிட்டாயே! நான் வைப் பாட்டியின் மகனுனுலும் அரசன் மகன்! கேவலம், அடிமைச் சேவகம் செய்யும் மந்திரியின் மகளான நீ பட்டத்துராணியாகக் கனவு காண் கிருயே?" என அலறினுன்; உதயவல்லி ஒன்றுமே செய்யவில்லை, அமை தியாகப் பேசினுள்:

"வைப்பாட்டியின் மகன் மன்னனுக முடியும்போது, மந்திரியின் மகள் அரசியாக முடியாதா?''

''என்னை வெறியனுக்காதே? கொலைகாரனுக்க நீ முயல்கிருயா! வீண் ஆசைகளை மனதில் வைத்துக் கனவு காண்கிருய்?''

உதயவல்லி திடத்தோடு கூறுவாள்; அவள் வலக்கர வளையல்கள் கலகலத்தன.

''கனவல்ல, நிறைவேறும் நினைவு! மந்திரியின் மகள் பட்டத்து ராணியாக முடியாதென்ரு கூறினீர்? யாழ்ப்பாணவரசின் சிம்மா

சனத்தில் உம் வாழ்வு முடிவதற்குள் பட்டத்துராணியாக இருந்து காட்டுகின்றேன்!'' எனச் சூளுரைத்த உதயவவலி, தன் மாளிகையை நோக்கி விம்மியபடி ஓடினுள். அதைவிட வேகமாகத்தன் புரவியில் தாவிய சங்கிலி குமாரன், பலமாகக் குதிரையின் வயிற்றில் காலால் உதைக்கவே அது அம்பென இருளைக் கிழித்தபடி விரைந்தது.

தூரத்தில் சேவல் ஒன்று கூவிக் குரல் கொடுத்தது.



## 19

## பிளவு தோன்றியது!

யாழ்ப்பாண இராச்சியத்திற்குப் புதியதொரு மன்னன் கிடைத்தான். ஆரியச் சக்கரவர்த்திகள் நாடுபேணி, தமிழ்பேணி, கலைபேணி அமர்ந்திருந்த எழில் நந்திச் சிம்மாசனத்தில் சங்கிலிகுமாரன் அமர்ந்து ஒரு திங்கள் கழிந்து போனது.

நாட்டின் விழாக்கோலம் படிப்படியாகக் குறைந்து, வழக்கமானதொரு இயக்கம் காணப்பட்டது. வரிகள் பல குறைக்கப்பட்டமையினுல் மக்களிடையே பொதுவாக மகிழ்ச்சி நிலவியது.

சாதாரண சங்கிலிகுமாரனுகக் கடற்கரை வெண்மணற் பரப்பிலே இலட்சியக் கனவுகளைக் கண்டு திரிந்த அவன், இன்று அந்த இலட்சியக் கனவுகளை நிறைவேற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தால் புதிய பொறுப்புக்களோடு நிமிர்ந்து நின்றுன்.

இன்று அவன் யாழ்ப்பாண அரசின் முடிபதி; சங்கிலிகுமாரனல்லன்; சங்கிலி செகராசசேகரன், அவன் பட்டப் பெயர்.

காலை மலர்ந்து வெகு நேரமாகிவிட்டது.

சங்கிலி செகராசசேகரன் மஞ்சத்தை விட்டு எழுந்து, சாளரத்தை நாடிச் சென்றுன். நடந்து முடிந்து போனவை யாவும் ஒரு கனவு போல மனதில் எழுந்து அழிந்தன.

எத்தனை கோடி நினைவுகள்? மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

காற்சதங்கை ஒலி 'கல்கல்'லென எழுந்தது; மெதுவாக மணிக் கதவங்கள் திறக்கப்பட்டமையினுல் மணிகள் கலகலத்த ஓசையும் எழுந்தது.

மன்னன் அசையாது, சிலையென நின்றுன்.

“சுவாமி......”

முதல் அழைப்பே சங்கிலிக்குக் கேட்டது.

சதங்கை ஒலி அவனை மிக நெருங்கி வந்தது; மென் மலர் மொக்கு ஒன்று அவன் வலத்தோள் மீது விழுந்தது; வளையல்கள் ஓசை எழுப்பின.

''என்ன அப்படிப் பலமான சிந்தனையாம்?''

மெதுவாகத் திரும்பினுன், மன்னன்.

ஆகா......

பனிச்சையாகக்கட்டிய மேக நிறக் கூந்தலிலே தேன்சிந்தும் நிற மலர்கள் குவிந்தும் விரிந்தும் இருக்க, பிறை நுதலுக்குக் கீழ் அந்த விற்புருவங்களுக்கும் கீழ், இரு ஏக்க விழிகள் இமைக்க மறந்து, தேங்கி நின்றன. கமலத்தைப் பழிக்கும் அவள் முகத்தில் அளவாக அந்தச் செவ்வுதடுகளைப் பிளந்தவர் யார்? அவற்றின் பகைப் புலத்தில் தெரிவது வெண்தரளங்களா ?

''அரசமாதேவி'' என அழைத்தான், மன்னன்: ''நீ என்ன கேட்டாய் ? உன்னைக் கண்டதும், உன் எழில் தரும் பிரமிப்பில் மறந்தே போனேன்.........''

''கேலியாக இருக்கிறதா.........'' எனச் சிணுங்கினுள், மாதேவி

சங்கிலி மெதுவாக அவள் கரங்களைப் பற்றினுன்.

''என்பட்டத்து மகிஷியோடு கேலிபேசுவேனு? உண்மையாகத்தான் கேட்டேன்...''

நாணத்தோடு இடைசாய்த்து, மெதுவாக அவனை ஏறிட்டுப் பார்த்த அரசமாதேவி கூறுவாள்:

''என்ன அப்படிப் பலமான சிந்தனை என்று கேட்டேன்.''

சங்கிலி மௌனமாகச் சாளரத்துக்கு வெளியே பார்த்தான்; அரண்மனை வெளி வாயிலில் காவல் வீரர்கள் நின்றிருந்தார்கள்.

''தனது நாற்பத்தோராண்டுப் பாரத்தை என் தந்தை கடந்த திங்கள் என் தலைமீது இறக்கி வைத்து விட்டார்கள். தேவி, இனி இப்பாரத்தை எவ்வளவு காலத்திற்கு நான் தாங்க வேண்டுமோ...'' என்றவன் அர்த்தத்தோடு அவள் மணிவயிற்றில் கரம் பதித்தான்.

அவள் நாணிச் சிவந்தாள்.

அதுவேளை, வெளியே புரவிகள் சில விரைந்துவரும் ஒலி எழுந்தது சாளரத்தினூடே கண்களை வெளியே செலுத்தினுன் சங்கிலி.

அரண்மனை முற்றத்தில் சில புரவிகள் வந்து நின்றன. அவற்றினின்றும் யாவரும் விரைந்து இறங்கினர். அவர்களுள் தலைவன் போன்றிருந்தவன், விரைந்து படிகளில் ஏறினுன்.

அவனைச் சங்கிலி கவனித்தான்.

''தேவி, நெடுந்தீவு வெடியரசன் மழவ மாப்பாணன் என்னைக் காண விரைந்து வருகிறுன். நான் ஆலோசனை மண்டபத்திற்குப் போகின்றேன்''

(தொடரும்)

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon


# அடுத்த இதழில் ஆரம்பமாகின்றன.

தொடர் காவியம்

## கீரிமலையினிலே...

கவிஞர் வி. கந்தவனம்

புதிய இலக்கிய அம்சம்

## நூல் பிறந்த கதை

இரசிகமணி கனக. செந்திநாதன்

இலக்கியப் பிரச்சனை

## இலக்கிய மேடை

'வேதாளப்'

விமர்சனத் தொடர்

## ஈழத்துச் சிறுகதைமணிகள்

'செம்பியன் செல்வன்'

**இன்றே சந்தாதாரர்கள் ஆகுங்கள்**

**ரூ. 4/- மட்டுமே**

தனிப் பிரதி விலை = /40 சதம்

**விவேகி**

29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம் 32, கண்டி வீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 23-9-67 இல் பதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.